Registered as a Newspaper
பக்கங்கள் – 16
விலை – ரூபா 50




"வேலியில போன ஈரானைத் தூக்கி வேட்டிக்குள்ள விட்டாச்சு. இனி அனுபவிக்கத்தான் வேணும் போல"

# உதயன்

சுடர் : 39
கதிர் : 151
வியாழக்கிழமை
25 ஏப்ரல் 2024
சித்திரை 12 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

# ஈரான்– இலங்கை உறவை வலுப்படுத்துவதற்கு தயார்

## இரு நாட்டு ஜனாதிபதிகளும் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்ரல் 25

இலங்கையுடன் சிறந்த ஒத்துழைப்புடன் முன்னோக்கிச் செல்லத் தயாராக உள்ளோம். இலங்கையின் பெரும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு தொழில்நுட்ப மற்றும் பொறியியல் சேவைகளை வழங்குவதன் மூலம் இலங்கையின் முன்னேற்றத்துக்கும் அபிவிருத்திக்கும் உதவத் தயார் என்று ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி தெரிவித்துள்ளார்.

15

## ஈரானுடன் நெருங்கினால் பொருளாதாரத் தடை

### அமெரிக்கா எச்சரிக்கை

கொழும்பு, ஏப்.25

ஈரானுடன் வர்த்தகத்தில் ஈடுபடும் நாடுகள் பொருளாதாரத் தடையை எதிர்நோக்கும் ஆபத்து உள்ளது என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி தனது பாகிஸ்தான் பய

15



## இலங்கை வந்தார் ஈரான் ஜனாதிபதி

### 'உமாஓயா ' திட்டமும் திறப்பு

கொழும்பு, ஏப்.25

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி நேற்று இலங்கையை வந்தடைந்தார். ஈரான் ஜனாதிபதி மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தலைமையில் உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டமும் நேற்றுத் திறக்கப்பட்டது.

15



## நல்லூர் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்; நீதிபதி இளஞ்செழியன் சாட்சியம்!

யாழ்ப்பாணம், ஏப்.25

2017 ஆம் ஆண்டு ஜூலை மாதம் நல்லூர் ஆலயப் பின்புற வீதியில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நேற்றுச் சாட்சியமளித்தார்.

15

## தமிழரசுக் கட்சி வழக்கு மே 31க்கு ஒத்திவைப்பு!

திருகோணமலை, ஏப்.25

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிர்வாகத் தெரிவு தொடர்பான வழக்கு எதிர்வரும் மே மாதம் 31ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

02

## நண்பனைக் காப்பாற்றுவதே என் இலக்காக இருந்தது

### நீதிமன்றில் கண்ணீர் விட்டழுத பொலிஸ் கொன்ஸ்டபிள்

யாழ்ப்பாணம், ஏப்.25

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நண்பனை மருத்துவமனைக்குக் கொண்டு சென்று காப்பாற்ற வேண்டும் என்பதே அப்போதைய சூழ்நிலையில் எனது மனதில் இருந்தது. அதனால் துப்பாக்கிச்சூட்டின் பின்னரான சூழலைக் கவனிக்க முடியவில்லை

15

## சாட்சிக்கூண்டில் நின்றாலும் நீதிபதி என்றே அழைக்கலாம்

யாழ்ப்பாணம், ஏப். 25

சாட்சிக்கூண்டில் நின்றாலும் நீதிபதியை, நீதிபதி என்றே விளிக்கலாம் என யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி சூசைதாசன் தெரிவித்தார்.

2017ஆம் ஆண்டு மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் மீதான கொலை

15

வல்வை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு வருடாந்தம் நடத்தப்படும் இந்திரவிழா நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. அதில் செண்பகப் பறவையின் இராட்சத உருவம் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. தற்போது செண்பகப் பறவை அருகிவரும் நிலையில், விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 'செண்பகப் பறவை இனத்தைக் காத்திடுவீர்' என்ற பதாகையுடன் இந்த உருவம் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. (எ–66)



## படகு இயந்திரம் வெட்டி குடும்பஸ்தர் உயிரிழப்பு

மன்னார், ஏப்.25

படகு இயந்திரத்துக்குள் சிக்கி இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் மன்னார்,

02

## வவுனியா பல்கலை பெண்கள் விடுதிக்குள் உள்ளாடையுடன் மர்மநபர்!

வவுனியா, ஏப்.25

வவுனியா பல்கலைக்கழகத்தின் பெண்கள் விடுதிக்குள் மர்மநபர் ஒருவர் உள்ளாடையுடன்

02

## வெடுக்குநாறிமலை கைது

## சான்றுகள், ஆதாரங்களை கோரும் ம.உ. ஆணைக்குழு

வவுனியா, ஏப்.25

கடந்த மாதம் வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் சிவராத்திரி தின வழிபாடுகளில் ஈடுபட்ட 8 பேர் கைது செய்யப்பட்டமை தொடர்பாக நெடுங்கேணிப் பொலிஸாரிடமும், வனவளத் திணைக்கள அதிகாரிகளிடமும் மனித உரிமை ஆணைக்குழு விசாரணைகளை

02

## மூளைக்காய்ச்சலால் குடும்பஸ்தர் மரணம்

யாழ்ப்பாணம், ஏப்.25

காய்ச்சல் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மன்னார், பள்ளிமுனை மேற்கைச் சேர்ந்த

02

## வவுனியா கடவுச்சீட்டு அலுவலகம் மோசடி சந்தேகநபர்கள் கைது

வவுனியா, ஏப். 25

வவுனியா கடவுச்சீட்டு அலுவலகம் முன்பாக மோசடிகளில் ஈடுபட்டனர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் 6 பேர் வவுனியா பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா கடவுச்சீட்டு காரியாலயம் முன்பாக

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதிபதி கைது!

கொழும்பு, ஏப். 25
புத்தளம் காதி நீதிமன்றநீதிபதி இலஞ்ச ஊழல் ஆணைக் குழு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

5ஆயிரம் ரூபாவை இலஞ்சமாகப் பெற முற்பட்ட போது அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரான நீதிபதியை புத்தளம் நீதிவானை நீதிமன்றில் முற்படுத்தியபோது எதிர்வரும் மே 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (ச-இ)

### இம்முறை

# ஜனாதிபதித் தேர்தல்; பலமுனைப் போட்டி

கொழும்பு, ஏப். 25

**ஜனாதிபதித் தேர்தலுக்காக கட்சிகள் பலவும் தீவிரமாகச் செயற்பட்டு வரும் நிலையில் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்துள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது என்று அரசியல் களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸாநாயக்க, திலித் ஜயவீர, விளையாட்டுத் துறை முன்னாள் அமைச்சர் ரொஷான் ரணசிங்க, ஜனாதிபதித் தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் தொழிலதிபர் ஜனக ரத்நாயக்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனவின் பேரன் இஷான் ஜயவர்த்தன உள்ளிட்ட 7 பேர் போட்டியிடத் தீர்மானித்துள்ளனர்.

அதேவேளை, சுதந்திரக் கட்சியும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவேண்டும் என அந்தக் கட்சியின் பதில் தலைவரும், நீதித்துறை அமைச்சருமான விஜயதாஸ ராஜபக்சவின் பெயரை முன்வைத்துள்ளது. எதிர்வரும் காலங்களில் ஜனாதிபதித் தேர்தலில் மேலும் பல வேட்பாளர்கள் இணையவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஜனாதிபதித் தேர்தலுக்கு அதிக எண்ணிக்கையிலான வேட்பாளர்களின் பெயர்கள் முன்வைக்கப்படுவது இதுவே முதல்முறை என்றும் அரசியல் வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (ச-இ)



## எம்.பி.யானார் எம்.ஜி.வீரசேன

கொழும்பு, ஏப். 25
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கெக்கிராவை தேர்தல் தொகுதியின் அமைப்பாளர் எம்.ஜி. வீரசேன கமகே நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்றுள்ளார்.

மறைந்த அநுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச். நந்த சேனவின் வெற்றிடத்துக்கே அவர் நியமிக்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வில் நாடாளுமன்ற உறுப்பினராக வீரசேன சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். (ச-இ)

### தமிழரசுக்...

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிர்வாகத் தெரிவு தொடர்பான வழக்கு நேற்று திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அனுமதிக்கப்பட்ட இடைபுகுதாரரான இரத்தினவடிவேல் தரப்பு தமது ஆட்சேபனையை தாக்கல் செய்யவும், எதிராளிகளின் ஆட்சேபனை மனுக்களைப் படித்து வழக்காளி தங்கள் தரப்புக் கருத்தைச் சமர்ப்பிக்கவும் கால அவகாசம் வழங்கி நீதிமன்றம் வழக்கை மே மாதம் 31 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் மற்றும் குகதாசன் ஆகியோர் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தாங்கள் வழக்காளிகள் சமர்ப்பித்த அனைத்து விடயங்களையும் ஏற்று அதன் அடிப்படையில் வழக்கைத் தீர்க்க விரும்புகின்றோம் என்று நீதிமன்றில் தெரிவித்தார்.

இந்த வழக்கின் இடைபுகுதாரராக விண்ணப்பித்துள்ள இரத்தினவடிவேலின் மனுவை வழக்காளியோ ஏனைய எதிராளிகளோ ஆட்சேபிக்காத நிலையில் அவரை எட்டாவது எதிராளியாகச் சேர்க்கவும், அதற்கேற்ப வழக்குப் பதிவுகளை மாற்றவும் நீதிபதி அனுமதி அளித்தார்.

நீதிமன்ற வழக்கு விசாரணையின் பின்னர் இது தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவித்ததாவது:-

கடந்த பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு 29 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்த வழக்கு பொதுநலன் கருதி முடிவுக்குக் கொண்டுவரவேண்டும். கட்சி யாப்பை மீறியதாக இங்கு எதுவும் சொல்லப்படவில்லை. சில விதிகள் மேலதிகமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. அவற்றின் பிரகாரம் வழக்குத் தொடர்ந்தால் அதை வெற்றிகொள்ளலாம். ஆனால் காலம் எடுக்கும். காலம் தாழ்த்தி வெற்றி கொண்டாலும் அது தோல்வியாகவே கருதப்படும்.

வழக்காளி கோரும் நிவாரணத்தை வழங்கத் தயாராக இருக்கின்றோம். எங்களுடைய நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. இதை வழக்காளி தனது சட்டத்தரணி ஊடாகத் தெரிவிக்கவேண்டும். வழக்கை மீளப்பெறவேண்டும் என்ற வாதத்தை நீதிமன்றில் முன்வைத்தேன் - என்றார். முதலாம் எதிராளி மாவை சேனாதிராசா மற்றும் ஏழாம் எதிராளி சீ.யோகேஸ்வரன் ஆகியோருக்காக சட்டத்தரணி கேசவராஜன் அறிவுறுத்தலின்பேரில் சட்டத்தரணிகளான யூட் தினேஸ், ஜனாதிபதி சட்டத்தரணி புவிதரன் ஆகியோரும், இரண்டாம் எதிராளி சி.சிறீதரன் மற்றும் நாலாம் எதிரி குகதாசன் ஆகியோருக்காக சட்டத்தரணி வினோஜினி செல்வராஜாவின் அறிவுறுத்தலின்பேரில் சட்டத்தரணிகளான பிருந்தா சந்திரகேஸ், ரி.சிவானந்தராஜா மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவும், 6ஆம் எதிராளி எம்.ஏ.சுமந்திரனுக்காக அவரும், 3 ஆம் எதிராளி குலநாயகம் மற்றும் 4ஆம் எதிராளி சத்தியலிங்கம் ஆகியோருக்காக சட்டத்தரணி பிரஷாந்தினி உதயகுமாரின் அறிவுறுத்தலின்பேரில் சட்டத்தரணிகளான சுமங்களா, ரவீந்திரன் கனகசபை, சிரேஷ்ட சட்டத்தரணி டுசித்யோன் தாசன் ஆகியோரும், அனுமதிக்கப்பட்ட இடைபுகுதாரரான இரத்தினவடிவேல் சார்பாக சட்டத்தரணி கே.வி.எஸ். கணேசராஜனும் முன்னிலையாகியிருந்தனர். (அ-எ-26)

### பெண்கள்...

நுழைந்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை நடந்துள்ளது என்று கூறப்படுகின்றது. பம்பைமடுவில் உள்ள வவுனியாப் பல்கலைக்கழகத்தின் பெண்கள் விடுதிக்குள் இரவுவேளை மர்மநபர் ஒருவர் உள்ளாடை மட்டும் அணிந்த நிலையில் நுழைந்துள்ளார். அங்கிருந்த மாணவி ஒருவர் அவரைக் கண்டு கூச்சலிட்டுள்ளார். அதையடுத்து அந்த நபர் தப்பிச் சென்றுள்ளார் என்று கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தால் விடுதியில் தங்கியிருந்த மாணவிகள் மத்தியில் அச்சம் ஏற்பட்டது. பலர் விடுதியில் இருந்து வெளியேறியுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

அங்குள்ள பாதுகாப்புக் கமராப் பதிவுகளை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-110)

### சான்றுகள்....

முன்னெடுத்துள்ளது.

நேற்று வவுனியா பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்துக்கு அழைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. ஆலய நிர்வாகத்தினரிடமும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

அன்றையதினம் நடந்த சம்பவங்கள் தொடர்பாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். அவர்களால் கூறப்பட்ட பல விடயங்களைப் பொலிஸார் மறுத்தனர். சம்பவ இடத்துக்குச் சென்று பார்த்த போது வனப் பகுதிக்குள் தீ மூட்டப்பட்டிருந்தது என்றும், பிளாஸ்ரிக் பொருள்கள், சமையல் கழிவுகள், ஆலயப் பூசைப் பொருள்கள் அங்கு கொட்டப்பட்டிருந்தன என்று வனவளத் திணைக்களத்தினர் குறிப்பிட்டனர்.

தொல்பொருள் திணைக்களத்தின் கடிதத்தின் அடிப்படையிலும், வனப் பகுதிக்குள் தீ மூட்டப்பட்டிருந்ததாலும் அங்கிருந்தவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று நெடுங்கேணிப் பொலிஸார் தெரிவித்தனர். தாங்கள் எவர் மீதும் தாக்குதல் நடத்தவில்லை என்றும், வேட்டியை அகற்றி அரைநிர்வாணமாக்கவில்லை என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். நாளை வெள்ளிக்கிழமை, அங்கு நடைபெற்றன என்று கூறப்படும் விடயங்கள் தொடர்பான சான்றுகள் மற்றும் ஆதாரங்களை ஆலய நிர்வாகம் சமர்ப்பிக்க வேண்டும் என்று மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது. (அ-எ-110-18)

### படகு...

முத்தரிப்புத்துறையில் நேற்றுக் காலை நடந்துள்ளது.

தேவராஜா பீரிஸ் என்ற இளம் குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

கடற்றொழிலுக்காகச் சென்றிருந்த சமயம், படகின் இயந்திரக் காற்றாடி வெட்டி இவர் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சடலம் சிலாவத்துறை மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ-எ-213)

### மூளைக்காய்ச்சலால்...

ஜோன் திரவியம் குமரேசன் (வயது -49) என்பவரே உயிரிழந்தவராவார். மூளைக்காய்ச்சல் காரணமாகவே இவர் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

காய்ச்சல் ஏற்பட்டதை அடுத்து கடந்த 20 ஆம் திகதி இவர் மன்னார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக மறுநாள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

அவருக்குச் சிகிச்சை வழங்கப்பட்டு வந்த நிலையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் அவர் உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சட்டவிரோதக் குடியேறிகளை வெளியேற்ற பிரிட்டன் முடிவு

## ஈழத்தமிழர் எதிர்ப்புக்கு மத்தியிலும் பிரிட்டனில் நிறைவேறியது சட்டம்

லண்டன், ஏப். 25

**பிரிட்டனுக்கு வரும் சட்டவிரோதக் குடியேறிகளை இடைமறித்துத் திருப்பிய னுப்பும் விதமாகவும், வலுக்கட்டாயமாக நாடு கடத்தும் விதமாகவும் கொண்டுவரப்பட்டுள்ள சட்டவரைவுக்குப் பிரிட்டன் நாடாளுமன்றம் நேற்று ஒப்புதல் வழங்கியுள்ளது.**


2021ஆம் ஆண்டுக்கு முன்னரான 4 ஆண்டுகளில் 299 பேர் மட்டுமே பிரிட்டனுக்குள் சட்டவிரோதமாகக் கடல் வழியாக நுழைந்தனர். 2022ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 45 ஆயிரத்து 774ஆக அதிகரித்தது. இதைக் கட்டுப்படுத்த, சட்டவிரோதக் குடியேறிகளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக் மேற்கொண்டார். அவருடைய நடவடிக்கைகளுக்கு புலம்பெயர் தமிழர்கள் உட்படப் பல தரப்பினரும் தங்களின் கடுமையான எதிர்ப்பைப் பதிவுசெய்தனர். எனினும், சுனக் தன் நிலைப்பாட்டில் விடாப்பிடியாக நின்றார். இந்த நிலையில் பிரதமர் சுனக்கின் சட்டவரைவுக்கு பிரிட்டன் நாடாளுமன்றம் நேற்று முன்தினம் வழங்கியுள்ளது. இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து எதிர்வரும் 12 வாரங்களுக்குள் ஒருதொகை சட்டவிரோத குடியேறிகள் விமானம் மூலம் ருவண்டாவுக்குநாடுகடத்தப்படவுள்ளனர். (ம)



# நொருங்கியது ஓட்டோ சாரதிக்குப் படுகாயம்

யாழ். நகரத்தை அண்மித்ததாக நான்குகால்மடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் ஓட்டோ கடும் சேதங்களுக்குள்ளாகியதுடன் சாரதி யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மானிப்பாய் - காரைநகர் பிரதான வீதியில் நான்கு கால் மடத்திலுள்ள அரைக்கும் ஆலையிலிருந்து பிரதான வீதிக்கு ஏறிய ஓட்டோவே விபத்தில் சிக்கியுள்ளது. பட்டா வாகனமும் பகுதியளவில் சேதமடைந்தது. விபத்துத் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ஓ-125)



# உலகில் பெரிய இரத்தினம் இலங்கையில் கண்டுபிடிப்பு!

கொழும்பு, ஏப். 25

உலகிலேயே மிகவும் பெரிய இரத்தினக்கல் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சுமார் 802 கிலோ எடைகொண்ட இந்த இரத்தினக்கல்லின் பெறுமதி 15 ஆயிரம் கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த இரத்தினக்கல் அறுகோண இரு பிரமிட் வடிவம் கொண்டுள்ளது என்றும் இது உலகின் அரிதான இரத்தினங்களில் ஒன்றாகும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# எந்த அரசு வரினும் நாம் பச்சைக்கொடி

## மனோகணேசன் தெரிவிப்பு

அடுத்து ஆட்சி அமைக்கும் எந்தவோர் அரசாங்கத்திலும் தான் அமைச்சராகப் பதவி வகிக்கத் தயாராகவே உள்ளேன் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமது அணியான ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் முன்னணி வகிப்பார். எதிர்வரும் தேர்தலில் எந்த வேட்பாளர் ஜனாதிபதியாகவேண்டும் என்பதனை மக்கள் தீர்மானிப்பார்கள். தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமாரவும் அரசாங்கத்தில் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளார் - என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

# ஈழத்தமிழர் இனப்படுகொலை கனடாவில் நினைவுச்சின்னம்

## இலங்கை அரசு அதிருப்தி

கனடாவின் பிரம்டன் நகரில் ஈழத்தில் இடம்பெற்ற இனப்படுகொலைகளுக்கு நினைவுச்சின்னம் அமைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், இதற்கு இலங்கை அரசாங்கம் தனது அதிருப்தியைத் தெரிவித்துள்ளது.

ஈழத்தில் இடம்பெற்ற இனப்படுகொலைகளின் நினைவாக நினைவுச்சின்னம் அமைக்கும் முயற்சிகள் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும், பின்னர் அவை கிடப்பில் போடப்பட்டிருந்தன. பிரம்டன் நகர நிர்வாகம் அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து தற்போது பணிகள் செயலுருப்பெற ஆரம்பித்துள்ளன. இந்த நிலையிலேயே, பிரம்டனில் அமைக்கப்படும் நினைவுச் சின்னத்துக்கு இலங்கை தனது அதிருப்தியைத் தெரிவித்துள்ளது. (ச-இ)

# சட்டவிரோத இறக்குமதி; 112 வாகனங்கள் மீட்பு!

சட்டவிரோதமான முறையில் இறக்குமதி செய்யப்பட்ட 700 கோடி ரூபா மதிப்பிலான 112 வாகனங்கள் மோசடி மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் மீட்கப்பட்டுள்ளன.

இந்த வாகனங்கள் தற்போது பயன்படுத்துபவர்களிடமிருந்து மீட்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளார். (ச-இ)

# தினம் தெரியுமோ?

இப்பத்தை உலகத்தில எங்கையும் வியாபாரம். எதிலையும் விளம்பரம் எண்ட மாதிரி நிலைமை. அதிலையும் கோயில் திருவிழாக்களிலதான் கனபேர் தங்கட விளம்பரத்துக்கும், வியாபாரத்துக்கும் பாவிப்பினம். ஏனெண்டால் எங்கட தமிழ் ஆக்களின்ர கலாசாரம் கோயில் கலாசாரம்தான். கிட்டத்தட்ட எங்கட வாழ்க்கைமுறையே கோயிலைச் சுத்தித்தான் இருக்கு. வீட்டில ஒரு நல்லது கெட்டது எண்டாலும் கோயில் திருவிழாக் காலத்தையும், பூசை நேரத்தையும் வைச்சுத்தான் முடிவு செய்வம். கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் எண்டு ஔவையார் சொன்னதை இன்னும் இறுக்கமாப் பின்பற்றுறது நாங்களாத்தான் இருக்கும். சில ஊர்களில குடிமனையைவிட கோயில்களின்ர எண்ணிக்கைகூட இருக்கிறதும் உண்டு.

இப்பிடிக் கோயிலோட பின்னிப்பிணைஞ்சபடி எங்கட வாழ்க்கை இருக்கிறதால எல்லாரும் எங்க இருந்தாலும் திருவிழா எண்டால் ஒண்டா வந்திடுவம். அதால கனபேர் ஒரே இடத்தில கூடுற இடம்தானே வியாபாரத்துக்கும், விளம்பரத்துக்கும் வசதி. நல்லூர் கோயில்ல இருந்து கதிர்காமம் மட்டும் இந்த வியாபார, விளம்பர வேலைகளுக்குப் பஞ்சமிருக்கிறேலை. இப்பிடி விளம்பரங்களைச் செய்துதங்கட கொம்பனியின்ர வாடிக்கையாளரைக் கூட்டுறதுக்கு பணத்தையும் வாரியிறைப்பினம். 'ஏன் இப்பிடி விளம்பரப்படுத்தலுக்கு காசைக் கொட்டுகினம்?' எண்டு விசயம் தெரியாதவை யோசிப்பம். ஆனால் சின்ன மீனைப் போட்டு பெரிய மீனைப்பிடிக்கிற மாதிரி, இப்பிடி காசை விசுக்கி விளம்பரம் செய்தால்தான் அது சனத்திட்ட பிரமாண்டமா போய்ச் சேர்ந்து லாபத்தைக் கொட்ட வைக்கும் எண்டது கொம்பனிக்காரருக்கு தெரிஞ்ச உண்மை.

இப்ப இந்த விளம்பரங்கள் தனிய பிஸ்னஸுக்கு எண்டில்லாமல் நல்ல விசயங்களைச் செய்யிறதுக்கும் பாவிக்கினம். முந்தநாள் வல்வெட்டித்துறையில நடந்த இந்திரவிழாவில ஒரு விசயம் எல்லாரையும் கவர்ந்தது. அது என்னெண்டால், பெரிசா செய்து வைச்ச செம்பகப் பறவையின்ர பொம்மை. எங்கட தேசியப்பறவையா இருந்தது செம்பகம். எங்கட நாட்டுக்கே உரிய பறவை. எங்கட சூழல் சங்கிலி அறாமல் இருக்கவும், தோட்டம் தூரவில கண்டுகாலியை அரிக்கிற புழுக்களை அழிக்கவும் செம்பகம் முக்கியம். ஆனால் அதுக்குப் பெரிசா பறக்கத் தெரியாததாலையோ, இல்லாட்டி மனிசர் இருக்கிற இடத்துக்கு கிட்ட வாழுறதாலையோ றோட்டில ஒவ்வொருநாளும் செம்பகங்கள் அடிபட்டுச் செத்தபடியே இருக்குதுகள். இப்ப செம்பகங்களைக் காணுறதே அரிதாப் போட்டுது. இப்பிடியே விட்டால் செம்பகம் எண்டொரு பறவை இல்லாமலே போடும். அதால செம்பகங்களைப் பாதுகாக்கச் சொல்லித்தான் இப்பிடியொரு பிரமாண்டமான பொம்மையை இந்திரவிழாவில வைச்சு எல்லாருக்கும் விழிப்புணர்வை உண்டாக்கி இருக்கினம்.

எதெதுக்கோ எல்லாம் விளம்பரம் செய்யிற இந்தக் காலத்தில இப்பிடி செம்பகத்துக்காக விளம்பரம் செய்த அந்த நல்ல மனங்களுக்கு பட்சியின்ர 'சலூட்'!

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரோதி : புதுவருடப் பலன்கள்

## துலாம்

மற்றவர்களின் மனநிலையை நொடிப்பொழுதில் புரிந்து கொள்ளும் அசாத்திய ஆற்றல் உள்ள நீங்கள், துவண்டு வருவோருக்கு தோள் கொடுப்பவர்கள்!

உங்கள் ராசிக்கு 9ஆம் வீட்டில் சந்திரன் நிற்கும் நேரத்தில் இந்த குரோதி வருடம் பிறப்பதால் மாறுபட்ட அணுகுமுறையால் முன்னேறுவீர்கள். உங்கள் மீது உங்களுக்கே இருந்து வந்த அவநம்பிக்கைகள் நீங்கும். சாதிக்கும் எண்ணம் உருவாகும். பணவரவு திருப்திகரமாக இருக்கும்.

இந்தப் புத்தாண்டின் தொடக்கத்தில் உங்களுடைய ராசிநாதன் சுக்ரன் உச்சம் பெற்று அமர்ந்திருப்பதால் மகிழ்ச்சி உண்டாகும். இந்தாண்டு முழுக்க 5ம் இடத்திலேயே சனி அமர்ந்திருப்பதால் முடிவுகள் எடுப்பதில் ஒருவித குழப்பமும், தடுமாற்றமும் இருந்துக் கொண்டேயிருக்கும். சில நேரங்களில் உங்கள் உள்மனதில் எதிர்மறை எண்ணங்கள் உருவாகும். 30.04.2024 வரை குருபகவான் 7ஆல் அமர்ந்து உங்கள் ராசியைப் பார்த்துக் கொண்டிருப்பதால் உங்களின் திறமைகள் வெளிப்படும். 01.05.2024 முதல் குரு ராசிக்கு 8ல் சென்று மறைவதால் வீண் அலைச்சல் அதிகரிக்கும். முன்கோபத்தால் நல்லவர்களைப் பகைத்துக் கொள்ளாதீர்கள்.

கேது ராசிக்கு 12ல் மறைந்திருப்பதால் வாழ்க்கையின் நெளிவு, சுளிவுகளைக் கற்றுக்கொள்வீர்கள்.

உத்தியோகத்தில் உயரதிகாரிகளின் ராஜதந்திரத்தை உடைத்தெறிவீர்கள். காலம் நேரம் பார்க்காமல் உழைக்க வேண்டிவரும். இந்தப் புத்தாண்டு சின்ன சின்ன ஏமாற்றங்களை தந்தாலும் வெளிச்சத்தை நோக்கி பயணிக்க வைத்து சாதனைகள் படைக்கத் தூண்டும்.

### தமிழ், கணித, விஞ்ஞான பாடங்களில்

# மாணவர்களுக்கு அறிவூட்டுகின்ற சிறப்புச் செயற்றிட்டம் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஏப். 25

வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் ஆகிய பகுதிகளில் வாழும் மாணவர்களுக்கு தமிழ், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் சிறப்பான பெறுபேற்றை வெளிப்படுத்த வைப்பதற்கான அறிவூட்டும் செயற்றிட்டத்தை இலங்கை சைவமகாசபையின் சைவ அறப்பணி நிதியம் ஆரம்பித்துள்ளது. 'கோணமாமலை 400, மீண்டும் தொடங்கும் மிடுக்கு' எனும் செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாகவே இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தின் ஐந்து சிவப்பிராந்தியங்களில் மிகவும் வளப்பற்றாக் குறையை எதிர்கொள்ளும் ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளில், கல்வி அடைவு மட்டத்தில் மேம்பாடு தேவைப்படும் 400 மாணவர்களை தமிழ், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியடைய வைப்பதை இலக்காகக் கொண்டு இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று இலங்கை சைவமகாசபையின் பொதுச் செயலாளர் மருத்துவக்கலாநிதி ப.நந்தகுமார் தெரிவித்துள்ளார். (ப-66)



அரியாலை ஸ்ரீ பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட இராவண கைலாச வாகனம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வெள்ளோட்டம் விடப்பட்டது. (ப-100)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஏப். 25

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகச் சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் வாராந்த திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 2, நவாலி தெற்கு திருவருள்மிகு ஸ்ரீ நாகராஜா ராஜேஸ்வரி அம்பாள் திருக்கோவில் பிரதான மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. மாணிக்கவாசக சுவாமிகள் குரு வணக்கத்தைத் தொடர்ந்து, 'மாணிக்கவாசகரும் திருவகவலும்' என்னும் விடயப்பொருளில் இளஞ்சைவப்புலவர் பிரசங்க வாரிதி ச.நவநீதனின் சொற்பொழிவு இடம்பெறவுள்ளன. (ப)



கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் இந்த ஆண்டுக்கான தடகள விளையாட்டுப்போட்டி, வித்தியாலய மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. அதிபர் அப்புத்துரை ஆனந்தராஜா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக பழைய மாணவரும் வானிலை ஆய்வுத்துறைத் தலைமைக் கணக்காளருமான சூடாமணி அகிலன் கலந்துகொண்டார். (ப)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** வரவும் செலவும் அடுத்தடுத்து வந்தாலும் சமாளித்துவிடுவீர்கள். மகிழ்ச்சி உண்டாகும். குடும்பப் பெரியவர்களுடன் கலந்து பேசி முடிவு எடுப்பீர்கள். நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு.

**இடபம்:** உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் குல தெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். நன்மைகள் அதிகரிக்கும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் கிடைக்கும். செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் ஏற்படலாம். உறவுகளால் ஆதாயம் உண்டாகும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**கடகம்:** எதிர்பாராத செலவுகள் ஏற்படும். உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும். உற்சாகத்துக்குக் குறைவிருக்காது. எதிர்பார்த்த உதவி கிடைக்கும். காரியங்களில் வெற்றி உண்டாகும்.

**சிம்மம்:** காரியங்கள் அனுகூலமாகும். செலவுகள் ஏற்பட்டாலும், மகிழ்ச்சியே உண்டாகும். சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். பணியாளர்களால் செலவுகள் ஏற்படும். முருகப்பெருமானை வழிபட காரிய அனுகூலமாகும்.

**கன்னி:** சோர்வு நீங்கி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். உறவினர்கள் மூலம் சில பிரச்சினைகள் ஏற்படலாம். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். மகாலட்சுமியை வழிபட செலவுகளைச் சமாளித்துவிட முடியும்.

**துலாம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். எ பேசும்போது பொறுமை அவசியம். காரியம் முடிவதில் தாமதம் ஏற்படக்கூடும். தாயின் அன்பு ஆறுதலாக இருக்கும்.

**விருச்சிகம் :** வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டு. சில பிரச்சினைகள் ஏற்படும் அதிகரிக்கும் செலவுகளால் கடன் வாங்க நேரிடும். முருகப்பெருமானை வழிபடுவது நன்று.

**தனுசு:** உற்சாகமான நாள். மனஉறுதியுடன் செயற்படுவீர்கள். காரியம் அனுகூலமாகும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. காரியம் அனுகூலமாகும். சிவபெருமானை வழிபடுவதன் மூலம் நன்மைகள் அதிகரிக்கும்.ப

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். அவசியத் தேவைகளுக்காக செலவு செய்ய வேண்டி வரும். சில சங்கடங்கள் ஏற்படலாம். உணவு விடயத்தில் கவனமாக இருக்கவும்.

**கும்பம்:** உற்சாகமும் கலகலப்புமான சூழ்நிலை காணப்படும். எதிர்பார்த்த காரியம் அனு கூலமாக முடியும். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**மீனம்:** எதிலும் நிதானமாகச் செயற்படவும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். வீண்விவாதம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






முள்ளியவளை கலைத்தாய் நாடக கலாமன்றத்தின் ஏற்பாட்டில் முதுபெரும் கலைஞர் அண்ணாவியார் கலாபூஷணம் என்.எஸ். மணியின் 'மாவீரன் பண்டாரவன்னியன் வரலாற்று நாடகம்' முள்ளியவளை காட்டுவிநாயகர் ஆலய அரங்கில் கடந்த சனிக் கிழமை அரங்கேற்றப்பட்டது. (எ-19)



வயலூரன் எழுதிய வெண்பா மாலை நூல் வெளியீட்டு நிகழ்வு வே.தபேந்திரன் தலைமையில் கொடிகாமம் நட்சத்திர மகால் மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் நூலின் வெளியீட்டுரையையும், நயப்புரையையும் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா நிகழ்த்தினார். முதற்பிரதியை தொழிலதிபர் மு. பிரசன்னா பெற்றுக் கொண்டார். (எ-9)





சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டுத் திருநெல்வேலி சமுர்த்தி வங்கி நடத்திய புத்தாண்டுக் கிராமிய விளையாட்டுவிழா கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (எ-66)



நீர்வேலி கந்தசுவாமி ஆலய வருடாந்த தேர்த்திருவிழா கடந்த திங்கட்கிழமை அடியவர்கள் சூழ பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-17)



குறைந்த வருமானம் பெறுவோருக்கான இலவச அரிசி வழங்கும் நிகழ்வு மன்னார் நகர பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட 'பெரியகடை' சனசமூக நிலையத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (எ-இ)



தென்மராட்சிப் பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கம் ஏற்பாடு செய்த, குருதிக் கொடை நிகழ்வு, பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. (ப-9)



அமரர் செபமாலை ஜெறின்சனின் 3ஆவது ஆண்டு நினைவாக, அன்னாரின் குடும்பத்தின் அனுசரணையில் சென்.மேரிஸ் கழகம் நடத்திய குருதிக் கொடை நிகழ்வு, நாவாந்துறை புனித பரலோக அன்னை ஆலய முன்றலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (ப-66)



குப்பிழான் வீரமனை கன்னிமார் கௌரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவ தேர்த்திருவிழா கடந்த திங்கட்கிழமை அடியவர்களின் பங்குபற்றுதலுடன் சிறப்பாக இடம்பெற்றது. (எ-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி நடேசு நாகம்மா

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் பிறவுண் வீதி கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடேசு நாகம்மா நேற்று முன்தினம் (23.04.2024) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்ற முருகன்-சௌந்தரி தம்பதியினரின் மூத்த மகளும் காலஞ்சென்ற நடேசுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வேலு-நாகம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான பசுபதி, செல்லம்மா மற்றும் தங்கம்மா, பொன்னம்மா, கந்தசாமி, ஜெயரஞ்சன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் குகனேஸ்வரன், குமரேஸ்வரன், சுதேஸ்வரன் ஆகியோரின் அன்புத்தாயும், புவனேஸ்வரி, காமாட்சி, சாந்தினி ஆகியோரின் மாமியும் வேந்தினி, பார்த்தீபன், ஜனா குமரன், பிரதீஸ்வர், ஜெனீஸ்வர், சதுர்ஷன், சுபிற்சன் ஆகியோரின் பேர்த்தியும், பிரணவி, யாதவி, ஆதவ், அக்ஷரா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2024) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**297/14 பிறவுண் வீதி**
**கொக்குவில்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 477 0511**

(CS 328) V-1

# இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி



**தோற்றம் : 20.05.1950** **மறைவு : 18.04.2022**

திதி-அபரபட்சதுதியை

## அமரர் உயர்திரு சோதிலிங்கம் பரமலிங்கம்

இவ் அவனியை விட்டுப்பிரிந்து ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்தாலும் மறையாமல் இன்றும் எம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கும் ஆருயிர் அப்பாவே,

அப்பா எங்கு பார்த்தாலும் உங்கள் திருவுருவம்தான் எம் கண்முன் தெரிகின்றது. நீங்கள் எங்களுடன் கலகலப்பாக பேசி சிரித்து மகிழ்வாக வாழ்ந்த நாட்களை எங்களால் மறக்க முடியவில்லை அப்பா. நீங்கள் எங்களுக்காக செய்த ஒவ்வொன்றும் காலத்தால் அழியாதவை. என்றென்றும் உங்கள் கருணை உள்ளத்தின் அருமை பெருமைகளை நினைத்தே நாங்கள் வாழ்ந்துகொண்டிருப்போம். அப்பா உங்களுடன் வாழ்ந்த காலங்கள் எங்கள் வாழ்வின் பொற்காலங்களே.

எங்கள் ஆருயிர் அப்பாவே உங்கள் ஆத்மா சாந்தி அடைந்து கடவுளோடு இருக்கவேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி !!!**

**மனைவி கலா,**
**பிள்ளைகள் (கனடா)**

# அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது) கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடை நேர் விளைவுகள் ஏற்பாடுகள்) சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் 1992 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தாலும் 1989 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தாலும் திருத்தம் செய்யப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகக் கடமை புரியும் திரு. கிறகோரி சந்திரசேகரன் ஆகிய எனக்கு கையளிக்கப்பட்டு 2021.07.01ஆம் திகதிய 2234/39 ஆம் இலக்கமுடைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட அரச வர்த்தமானி மூலமாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களிற்கு அமைவாக மேற்படி சங்கத்தின் 11 கிளைகளுக்குமான கிளைக்குழு தெரிவிற்கான கிளைப் பொதுச் சபை கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின் படி நடைபெறுவதற்காக இக் கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களைப் பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

- அதற்கு அமைய இக் கூட்டங்களிற்கு சமூகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்குத் தனித்தனி அறிவித்தல் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
- கிளைப் பொதுச் சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமூகமளித்து வாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர்களில் நான்கிலொரு (1/4) பங்கினர் அல்லது 25 பேர் அதில் எது குறைவோ அத்தொகையாகும்.
- தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையில் இருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது (09) உறுப்பினர்களை தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச் சபையைக் கோருவார் இதில் இருவராவது 18-35 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் 09 பேருக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவு மேற்கொள்ளுவார்.
- இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கும் மேற்பட்ட வேட்பாளருக்கிடையே சம வாக்குகள் கிடைக்கப் பெறும் பட்சத்தில் திருவுளச் சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.
- தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச்சபையிற் பிரகடனப்படுத்துவதுடன் சங்க செயலாளருக்கும் ஆணையாளருக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.

**கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரங்கள்**

**கிளைப்பொதுக் கூட்டங்கள் நடைபெறும் திகதியும் காலமும் 2024.04.27 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணி**

| தொடர். இல. | கிளை இல. | கிளையின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடங்கள் | தவிசாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 254 | தம்பாலை | இளங்கதிர் சனசமூக நிலையம், பாரதி வீதி, அச்சுவேலி. | திரு.பாலச்சந்திரன் பாலரவி |
| 2 | 255 | வல்லை | கதிரொளி சனசமூக நிலையம், அச்சுவேலி வடக்கு. | திரு. இராஜசிவம் தனுசன் |
| 3 | 256 | மடத்தடி | நவோதயா சனசமூக நிலையம், அச்சுவேலி தெற்கு. | திரு. அமிர்தானந்தசிவம் சஞ்சயன் |
| 4 | 257 | கருங்காலி | சங்க காரியாலயம், அச்சுவேலி ப.தெ.வ.அ.கூ.சங்கம். | திரு. அருளானந்தம் தயாளன் |
| 5 | 258 | ஆவரங்கால் | சர்வோதயா சனசமூக நிலையம், ஆவரங்கால் மேற்கு. | திரு. செகராசா பகீரதன் |
| 6 | 259 | கிழக்கு புத்தூர் | சரஸ்வதி முன்பள்ளி, புத்தூர் கிழக்கு | திரு. யோசேப் ஜெகதாஸ் |
| 7 | 260 | வங்கியடி | லிங்கன் சனசமூக நிலையம், ஆவரங்கால் கிழக்கு, புத்தூர். | திரு. சண்முகநாதன் ரதிகுலன் |
| 8 | 261 | கிந்துசிட்டி | போத்தல் அடைப்பு நிலையம், சிந்துசிட்டி. | திரு. வீரசிங்கம் இரத்தினகாந்தன் |
| 9 | 262 | சிறுப்பிட்டி | ஜனசக்தி சனசமூக நிலையம், சிறுப்பிட்டி மேற்கு. | திரு. சற்குணசிங்கம், பிரேமிலன் |
| 10 | 264 | பன்னாலை | கலைமகள் சனசமூக நிலையம், சிறுப்பிட்டி கிழக்கு, பன்னாலை. | திரு. சிங்கராசா சியாந்தன் |
| 11 | 265 | வடக்குவெளி | சரஸ்வதி சனசமூக நிலையம், நவக்கிரி, புத்தூர் மேற்கு. | திரு. சற்குணனேசன் முகுந்தவேள் |

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்,
இல. 857, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

ஒப்பம் திரு. கி.சந்திரசேகரன்
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஏட்டுச்சுரைக்காயால் ஏது பலன்?


இலங்கையின் மனிதஉரிமைகள் நடைமுறைகள் குறித்து அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஜனநாயகம், மனிதஉரிமைகள் மற்றும் தொழிலாளர் பணியகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் பல விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

'சட்டத்துக்குப் புறம்பான கொலைகள், சித்திரவதைகள், மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்தைகள், அரசாங்கத்தின் தண்டனை, கடுமையான மற்றும் உயிருக்கு ஆபத்தான சிறை நிலைமைகள் மற்றும் தன்னிச்சையான கைது அல்லது காவலில் வைத்தல் போன்ற குறிப்பிடத்தக்க மனிதஉரிமை மீறல்கள் பதிவாகியுள்ளன. 2023ஆம் ஆண்டில் அரசாங்கம் அல்லது அதன் முகவர்கள் சட்டத்துக்குப் புறம்பான கொலைகள் உட்பட தன்னிச்சையான கொலை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் எனப் பல்வேறு செய்திகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. பொலிஸ் காவலில் பல உயிரிழப்புகள் இடம்பெற்றுள்ளன' என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் மனிதஉரிமை நிலைமைகள் தொடர்பில் தொடர்ச்சியாக சர்வதேச சமூகத்தால் பல அறிக்கைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. ஐ.நா. மனிதஉரிமைகள் ஆணையாளரது எழுத்துமூல அறிக்கை, வாய்மொழிமூல அறிக்கை என்று இதே போன்று பல அறிக்கைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. இந்த அறிக்கைகள் சர்வதேச சமூகத்தால் வெளியிடப்படுவதன் ஊடாக இலங்கை அரசாங்கம் ஏதாவது நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றதா? என்ற கேள்விக்கு இல்லை என்பதே பதில்.

இலங்கையில் உள்நாட்டுப்போருடன் மனிதஉரிமை மீறல்களோ அல்லது மனிதாபிமானச் சட்ட மீறல்களோ முடிவுக்கு வரவில்லை. இன்னமும் அவை வெவ்வேறு வடிவங்களில் தொடர்ந்து கொண்டேதான் இருக்கின்றன. தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறை பல்வேறு வடிவங்களில் சிங்கள-பௌத்த சித்தாந்தத்தை நடைமுறைப்படுத்தும் திணைக்களங்களின் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றது. அதற்கு எந்தவொரு கடிவாளமும் போடப்படவில்லை. ஆனால் ஒவ்வொரு ஆண்டும் ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவையும், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களமும், சர்வதேச மன்னிப்புச்சபையும் இலங்கையின் மீறல்களைக் கண்டித்துக் கொண்டிருந்தாலும் அதனால் எதுவும் நடக்கவில்லை என்பதே உண்மை. அறிக்கைகளால் இலங்கை அரசாங்கத்தை கட்டுப்படுத்தமுடியாது எனத் தெரிந்த பின்னரும் 'வெறும் காகித அறிக்கைகளை' மாத்திரம் வெளியிடுவதன் நோக்கம் என்ன? ஏட்டுச் சுரைக்காய் ஒருபோதும் கறிக்கு உதவப்போவதில்லை. இலங்கை விவகாரத்தில் பாதிக்கப்பட்ட தரப்புகளுக்கு நியாயத்தைப்பெற்றுக்கொடுக்கும் இதயசுத்தியிருந்தால் அடுத்த கட்டத்தை நோக்கி நகரவேண்டும். ஆனால் அந்த நாடுகள் அல்லது அமைப்புகள் தங்கள் நிகழ்ச்சி நிரலையே முன்னெடுக்கின்றன. அவர்களைப் பொறுத்தவரையில் பாதிக்கப்பட்ட தரப்புகளை கருவிகளாகப் பயன்படுத்தி தங்கள் விடயங்களை நிறைவேற்றிக்கொள்கின்றனர். இலங்கை விவகாரத்தை இன்று வரையில் ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவையில் அமெரிக்கா வைத்திருப்பதே அதற்காகத்தான் என்பது வெளிப்படை.

இவர்கள் வெளியிடும் அறிக்கைகளால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு எந்தவொரு நன்மையும் கிடைக்கப்போவதில்லை. அத்தோடு இத்தகைய விடயங்களும் நடக்காமல் விடப்போவதில்லை. எதிர்காலத்திலாவது வெறும் அறிக்கைகளை விடுத்து ஏமாற்றுவதைவிட தங்கள் நலன்களைத்தாண்டி காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். காத்திரமான நடவடிக்கைகள் மூலமே இலங்கை அரசாங்கத்தின் தறிகெட்ட போக்கைக் கட்டுப்படுத்த முடியும்.



# சிறுபோகச்செய்கைக்கு அரசாங்கம் நிதி மானியம்

கொழும்பு, ஏப். 25

**இந்த ஆண்டுக்கான சிறுபோக நெற்செய்கைகளுக்காக விவசாயிகளுக்கு நிதி மானியம் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீரவால் இதுதொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு கடந்த மாதம் அமைச்சரவை அனுமதியளித்துள்ளது. அதன்படி இந்த ஆண்டு நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஒரு ஹெக்ரேயருக்கு ரூபா 15 ஆயிரம் படி நிதி மானியம் வழங்கப்படவுள்ளது. பசளை இடுதல் மற்றும் நெல் சாகுபடி தேவைகளுக்குப் பயன்படுத்த இந்த நிதி கையளிக்கப்படவுள்ளது. அதற்கமைய அடுத்த வாரத்திலிருந்து விவசாயிகளின் வங்கிக் கணக்கில் குறித்த பணம் வைப்பிலிடப்படும் என கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் ஏ.எம்.எச்.எல். அபேரத்ன தெரிவித்துள்ளார். இதற்காக 7.5 பில்லியன் ரூபாவை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது. (ச-இ)

பாதாளக்குழுக் கட்டுப்படுத்தல்

## 5 வாரங்களில் 544 பேர் கைது!



கொழும்பு, ஏப். 25

பாதாள உலகக் குழுக்களை ஒடுக்குவதற்காக கடந்த மாதம் 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் இதுவரை 544 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். பாதாள உலகச் செயற்பாடுகளை ஒடுக்குவதற்காக 20 பொலிஸ் குழுக்கள் களமிறக்கப்பட்டுள்ளன.

இந்தச் சுற்றிவளைப்பில் நேற்றுமுன்தினம் பாதாள உலகக் குழுக்களைச் சேர்ந்த 4 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அத்துடன் பாதாள உலகக் குழுக்களைச் சேர்ந்தவர்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணினார்கள் எனச் சந்தேகிக்கப்படும் 9 பேர் கைதாகியுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)



## ஜே.வி.பி. கட்சி அசுர வளர்ச்சி

சீனா தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 25

தேசிய மக்கள் சக்தி அரசியல் ரீதியில் துரிதமாக வளர்ச்சியடைந்து மக்கள் மத்தியில் பிரபல்யமடைந்துள்ளது என்று சீன கம்யூனிசக் கட்சியின் சர்வதேச விவகார திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ள சீன கம்யூனிச கட்சியின் சர்வதேசவிவகாரதிணைக்களத்தின் தூதுக்குழு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவை சந்தித்தபோது இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார். (ச-இ)

## ஆசிரியர் வெற்றிட நேர்முகத் தேர்வு

கொழும்பு, ஏப். 25

அரச பாடசாலைகளிலுள்ள ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆட்சேர்ப்பு நேர்முகத் தேர்வு நடத்தப்படவுள்ளது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. கடந்த மார்ச் மாதம் 2ஆம் திகதி நடைபெற்ற பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கே இந்த நேர்முகத் தேர்வு நடத்தப்படவுள்ளது. (ச-இ)

## மைத்திரிக்கு தடையுத்தரவு

கொழும்பு, ஏப். 25

நீதிமன்ற விசாரணைகள் முடியும்வரை சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியை மைத்திரிபால சிறிசேன வகிப்பதற்கான தடையுத்தரவு மீளவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

**நாளை**

**26.04.2024**

**வெள்ளிக்கிழமை**

**சித்திரை - 13**

சுபநேரம் : 05.59 - 07.29

ராகுகாலம் : 10.29 - 11.59

**நாளொரு நல்வார்த்தை**

**அவசரமாகத் தவறு செய்வதைவிட, தாமதமாகச் சரியாகச் செய்வது மேல்.**

-தோமஸ்ஜெபர்சன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த இரண்டு வருடங்களில் 25 லட்சம் பேர் வெளிநாட்டுக்கு

இலங்கையில் காணப்படும் பொருளாதாரச் சிக்கல்கள் காரணமாக கடந்த இரண்டு வருடங்களில் 25 இலட்சத்து 65 ஆயிரத்து 365 பேர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களத்தின் பேராசிரியர் வசந்த அத்துகோரள இதனைத் தெரிவித்தார்.

அதன்படி, 2022ஆம் ஆண்டு 11 இலட்சத்து 27 ஆயிரத்து 758 பேரும் 2023ஆம் ஆண்டு 14 இலட்சத்து 37 ஆயிரத்து 607 பேரும் நாட்டை விட்டு வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

இவர்களில் 6 இலட்சத்து 8 ஆயிரத்து 925 பேர் வெளிநாட்டு வேலைகளுக்குச் சென்றுள்ளனர். இது வெளிநாடு சென்ற மொத்த எண்ணிக்கையில் 24 வீதமாகும். 2023ஆம் ஆண்டில் 2 இலட்சத்து 97 ஆயிரத்து 656 பேர் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காகச் சென்றுள்ளனர் என்றும் பேராசிரியர் மேலும் தெரிவித்தார். (ச-இ)






இரணைமடு, கனகாம்பிகை அம்பாள் ஆலயத்தில் நவதள இராஜகோபுர வியாழவரித் திருப்பணி மேல்தள வேலைகள் ஆரம்பிப்பதற்கான பூஜை ஹோம வழிபாடுகளும், இரணைமடு வாவியில் முன்னோர்களுக்கான பிதிர்த் தர்ப்பணமும், அம்பாளின் வசந்தமண்டப விஷேட பூஜை நிகழ்வுகளும் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றன. (ம)



வடக்கு மாகாணத்தின் புதிய சுகாதாரசேவைகள் பணிப்பாளராக மருத்துவர் சமன்பத்திரன நேற்றுத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். (ம-27,555)

## பதவியேற்றவுடன் ஆளுநரைச் சந்தித்த சுகாதாரப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஏப். 25

வடக்கு மாகாணத்தின் புதிய சுகாதார சேவைகள் பணிப்பாளராகப் பொறுப்பேற்றுள்ள வி.பி.சமன் தர்மசிறி பத்திரன, வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணம் பண்ணையில் அமைந்துள்ளவடக்குமாகாணசுகாதாரசேவைகள் பணிமனையில் தனது கடமைகளை நேற்றுக்காலை சம்பிரதாயபூர்வமாகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கடந்த ஒரு வருட காலமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் பதவிக்கு மேலதிகமாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளராகவும் கடமையாற்றி வந்த யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தனது பொறுப்புகளை புதிய பணிப்பாளரிடம் உத்தியோகபூர்வமாகக் கையளித்தார்.

இதன்பின்னர் புதிய சுகாதார சேவைகள் பணிப்பாளர், ஆளுநர் செயலகத்துக்குச் சென்று ஆளுநரையும் சந்தித்துக் கலந்துரையாடினார். புதிய சுகாதாரசேவைகள் பணிப்பாளரை வரவேற்ற ஆளுநர், கடமைகளை சிறப்பாக மேற்கொள்ள வாழ்த்துகளையும் கூறினார். அத்துடன் நோயாளர்களின் உரிமைகள் தொடர்பில் அதிக கரிசனை காட்டப்படவேண்டும் என தெரிவித்த ஆளுநர், இந்த விடயம் தொடர்பில் சுகாதாரத் துறையினர் அக்கறையுடன் செயற்படவேண்டும் எனவும் கூறினார்.

மேலும் மாகாணத்திலுள்ள ஆரம்ப சுகாதாரசேவைக் கட்டமைப்பை மேலும் வலுப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாள ருக்கு, ஆளுநர் ஆலோசனை களை வழங்கினார். (ஒ-5-26,66)




இணுவில், ஏப். 25

இணுவில் பொதுநூலக சனசமூக நிலையத்தின் 22ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, இணுவில் சனசமூக நிலைய மண்டபத்தில் குருதிக்கொடை நிகழ்வு ஒன்று எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் பி.ப. ஒரு மணி வரை இடம்பெறவுள்ளது. (ப-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உக்ரைனுக்கு கூடுதல் உதவிகள் பிரிட்டன் அறிவிப்பு

கீவ், ஏப். 25

உக்ரைனுக்கு பிரிட்டன் கூடுதல் இராணுவ உதவிகளை வழங்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளது. 500 மில்லியன் பவுண்டுகள் செலவில் இந்த உதவிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஐரோப்பிய நாடுகள் மீது ரஷ்யா தாக்குதல் நடத்துவதைத் தடுக்க, ரஷ்யாவைத் தோற்கடிப்பது அவசியம் என்று பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக் தெரிவித்திருந்தார். அவருடைய கருத்து பிரிட்டனில் பெரியளவில் பேசுபொருளானதைத் தொடர்ந்தே இந்த உதவிகளை பிரிட்டன் அறிவித்துள்ளது. (ம)

### மாலைதீவுத் தேர்தல்

## சீனா விசுவாசி மொய்சு வெற்றி

மாலைதீவு, ஏப். 25

மாலைதீவு நாடாளுமன்றத் தேர்தலில், சீன ஆதரவாளரான மொய்சுவின் மக்கள் தேசிய காங்கிரஸ் கட்சி தனிப்பெரும்பான்மைக்கும் அதிகமான இடங்களில் வெற்றிபெற்று வரலாறு படைத்திருக்கின்றது.

மொய்சுவின் மக்கள் தேசிய காங்கிரஸ் கட்சி பெற்றுள்ள இந்த இமாலய வெற்றி மாலைதீவுக்குள் மொய்சுவின் அதிகாரத்தை உறுதிப்படுத்துவதுடன், பிராந்திய இயக்கவியலில் ஒரு முக்கியமான மாற்றத்தை நிகழ்த்தும் என்று அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மாலைதீவு இந்தியாவின் ஆதிக்கத்திலிருந்து வெளியேறி சீன நிலைப்பாட்டில் பயணிப்பதையே பெரும்பாலான மக்கள் விரும்புகின்றனர் என்பதை வெளிக்காட்டும் வகையில் இந்தத் தேர்தல் முடிவுகள் அமைந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம)




## நொதேர்ண் யுனியின் ஏற்பாட்டில் மாணவர் ஊக்குவிப்புத் திட்டம்!

யாழ். மண்ணில் வெற்றிகரமான கல்விச் சேவையூடாக மாணவர்களை சிறந்த எதிர்காலத்தை நோக்கி நன்னெறிப்படுத்தி கொண்டிருக்கும் SLIIT NorthernUNI ஆனது வடக்கு மற்றும் கிழக்கைச் சேர்ந்த மாணவர்களுக்கு தற்பொழுதும் Information Technology மற்றும் Business Administr ation தொடர்பான கற்கைநெறிகளை வழங்கி வருகின்றது. இந்தக் கற்கைநெறிகள் கல்வி அமைச்சினால் அனுமதியளிக்கப்பட்ட கற்கைநெறிகள் என்பது அறுதியானது.

SLIIT NorthernUNI ஆனது பல்கலைக்கழகம் செல்லும் கனவுடன் கல்விகற்று, பல்கலைக்கு தெரிவாக முடியாதுபோன மாணவர்களை கல்வியில் சிறந்து விளங்கவென்றும், கல்வி கற்க விருப்பம் இருந்தும் வறுமையினால் வாய்ப்புக் கிடைக்காத மாணவர்களும் தமக்கான தரமான கல்வியைப் பெற்று சுய முன்னேற்றம் பெறவென்றும் மாணவர் நலனோடு சமூகநலனின் முன்னேற்றத்துக்கும் வழிவகை செய்யும் பொருட்டு மாணவர்களுக்கான கல்விக் கடன் வசதிகளையும் வழங்குகின்றது. உயர்தரப் பரீட்சையில் மாவட்டரீதியில் சிறப்புத் தேர்ச்சி எய்திய மாணவர்களுக்கான ஊக்கத் தொகையுடன் இணைந்த முழு புலமைப்பரிசில் களை வழங்கி வடக்கு மற்றும் கிழக்கு பிரதேச வாழ் மாணவர்களுக்கானஊக்குவிப்புப்பணிகளையும்யாழ். கல்வி மேம்பாட்டு நிதி மூலமான கல்விக்கடன் வசதிகளையும் மாணவர்கள் நலன் பெறும் வகையில் வழங்கிக் கொண்டிருக்கின்றது என்றால் மிகையாகாது. இந்த மேன்மைமிகு பங்கெடுப்பின் ஓர் அத்தியாயமாக, கடந்த மாசி மாதம் எமது SLIIT NORTHERN UNI வளாகத்தில் எமது Chairman இந்திரகுமார் பத்மநாதன் மற்றும் அவரது துணைவியார் திருமதி ரம்பா இந்திரகுமார் ஆகியோரால் பிராந்தியத்தைச் சேர்ந்த மாவட்ட ரீதியில் சாதாரண தரத்திலும் உயர்தரத்திலும் சிறப்புத்தேர்ச்சி பெற்று வெற்றியீட்டிய மாணவர்களுக்கு அவர்களின் சாதனையை பாராட்டி புலமைப் பரிசில்களும் மற்றும் ஊக்குவிப்பு தொகையும் வழங்கப் பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரப் பலஸ்தீனத்துக்காக அமெரிக்காவில் தீவிரப் போர்!

## யூத மாணவர்களும் பங்கெடுப்பு அதிரும் அமெரிக்கப் பல்கலைகள்




**வொஷிங்டன், ஏப். 25**

**சுதந்திரப் பலஸ்தீனம் உருவாக்கப்படவேண்டும். பலஸ்தீனர்களின் வளங்கள் அவர்களிடம் ஒப்படைக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தி, அமெரிக்காவில் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.**

பல்லாயிரம் யூத மாணவர்களின் பங்கெடுப்புடன் அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் இடம்பெற்று வரும் இந்தப் போராட்டங்கள் உலகின் கவனத்தை வெகுவாகவே ஈர்த்துள்ளதுடன், போராட்டத்தில் ஈடுபடும் மாணவர்கள் அமெரிக்க அதிபர் பைடனின் அரசாங்கத்துக்கு கனதியான அழுத்தத்தை வலியுறுத்தி வருவதாகவும் சொல்லப்படுகின்றது.

அமரிக்காவின் கொலம்பிய பல்கலைக் கழகத்துக்கு முன்பாகவும், நியூயோர்க், லொஸ் ஏஞ்சல்ஸ் மற்றும் லொஸ் வெகாஸ் பல்கலைக்கழகங்களுக்கு முன்பாக வும் இடைத்தங்கல் முகாம்களை அமைத்து போராட்டக்காரர்கள் தீவிரமான போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

காஸாவில் இஸ்ரேலின் தாக்குதலை தங்களது பல்கலைக்கழகங்கள் கண்டிக்க வேண்டும். இஸ்ரேலுக்கு வழங்கும் தீவிரமான ஆதரவை அமெரிக்கா கைவிடவேண்டும்.

அத்துடன், இஸ்ரேலுக்கு ஆயுதங்களை விற்பனை செய்யும் அமெரிக்க நிறுவனங்களில் இருந்து பல்கலைக்கழகங்கள் விலகியிருக்கவேண்டும் எனப் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (ம)



குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இலவச அரிசி வழங்கும் நிகழ்வு, மருதங்கேணிப் பிரதேச செயலகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (ப-66)


## கண்ணீர் அஞ்சலி

மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின்
அபிவிருத்தி உத்தியோகத்தராக சாவகச்சேரி பிரதேச
செயலகத்தில் கடமையாற்றும்
**திருமதி தீபா கேதீஸ்வரனின்** அன்புத் தந்தையார்
**மயில்வாகனம் கிருஷ்ணமூர்த்தி**
இறைபதமடைந்தமை குறித்து எமது ஆழ்ந்த துயரத்தை
தெரிவித்துக்கொள்வதுடன் அத்துயரில் நாமும் பங்குகொண்டு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்கள**
**உத்தியோகத்தர்கள் யாழ்ப்பாண மாவட்டம்**

(ஏ) [2.6]

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் : 06.02.1936
மறைவு : 22.04.2024

எமது பாடசாலையில் ஆசிரியையாக
கடமையாற்றும் **திருமதி தனலட்சுமி**
**தர்மகுலசிங்கம்**
அவகளின் அன்புத் தந்தையார்
**மூத்ததம்பி தம்பு இராமசாமி**
தோற்றமும் மறைவும் இயற்கை வகுத்த
நியதி என்றாலும் இன்பமும் துன்பமும்
வாழிவின் மேடையில் எப்போதும்
நடப்பதென்றாலும் தங்கள் பிரிவை
நினைந்து கலங்கித் தவிக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/ கொடிகாமம்
திருநாவுக்கரசு மத்திய கல்லூரி.



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

**விவசாயபொறியியல் துறை சான்றிதழ் கற்கைநெறி**
**பண்ணை இயந்திரங்களின் கோட்பாடுகள் (Farm machinery)**

விவசாயபொறியியல் துறை, விவசாயபீடத்தினால் நடாத்தப்படவுள்ள சான்றிதழ் கற்கைநெறிக்கு ஆர்வமுள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமை**
- தரம் 9 வரை கற்றிருத்தல்.

**கற்கைநெறி தொடர்பான விபரம்**
- கற்கைநெறிக்கான கட்டணம் 10000/=
- மொழிமூலம் - தமிழ்
- கற்கைநெறிக் காலம் - 8 வாரங்கள்

கற்கைநெறிக்கான விண்ணப்ப படிவத்தை யாழ். பல்கலைக்கழக இணையத்தளத்தில் **(www.jfn.agri.ac.lk)** அல்லது யாழ். பல்கலைக்கழக விவசாயபீட பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பதாரிகள் தமது பூரணப்படுத்தபட்ட விண்ணப்ப படிவத்துடன் தமது தகைமைகளை உறுதிப்படுத்தும் ஆவணப்பிரதிகளை 13.05.2024 முன்னர் பீடாதிபதி, விவசாயபீடம், யாழ். பல்கலைக்கழகம், கிளிநொச்சி வளாகம், அறிவியல்நகர் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

மேலதிக தகவல்களுக்கு இணைப்பாளர், கலாநிதி. ந. கண்ணன், அவர்களுடன் **021 206 0174** அல்லது **077 651 1553** எனும் தொலைபேசி இலக்கங்களினூடாக தொடர்புகொள்ளவும்.

**பதிவாளர்**

(ஏ.42277) (N.1)



## அரசாங்க அறிவித்தல்
## பகிரங்க ஏல விற்பனை
## மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

மாவட்டச் செயலகம் மற்றும் கீழ்க்குறிப்பிடப்படும் பிரதேச செயலகங்களின் அலுவலகப் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட தளபாடங்கள், வளிபதனாக்கிகள், கணினிகள், பிரிண்டர்கள், ரயர்கள், மின்சார உபகரணங்கள், கட்டடங்களிலிருந்து அகற்றப்பட்ட பொருட்கள் என்பன பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

ஏல விற்பனையில் பொருட்களைக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் நாவற்குழி அரச களஞ்சியசாலை மற்றும் உரிய அலுவலகங்களில் ஏல விற்பனை நடைபெறும் நாளுக்கு முதல் வேலை நாளில் மு.ப 09.00 மணிமுதல் பி.ப 01.00 மணிவரை பொருட்களைப் பார்வையிடலாம். ஏல விற்பனையில் பொருட்களைப் பெறுகின்றவர்கள் உடனடியாக முழுப்பணத்தினையும் ஏல விற்பனைக்குரிய காசாளரிடம் செலுத்திப் பற்றுச் சீட்டினைப் (பொது 172) பெற்று அன்றைய தினம் மாலை 04.00 மணிக்கு முன்னர் பொருட்களை அவ்விடத்திலிருந்து அகற்றுதல் வேண்டும்.

**வருடாந்த ஏல விற்பனை**


| இல | அலுவலகம் | ஏல விற்பனை நடைபெறவுள்ள திகதி | நேரம் | ஏல விற்பனை நடைபெறவுள்ள இடம் |
|---|---|---|---|---|
| 1 | பிரதேச செயலகம் பருத்தித்துறை | 29.04.2024 (திங்கட்கிழமை) | மு.ப 09.30 | பி.செ பருத்தித்துறை |
| 2 | பிரதேச செயலகம் கரவெட்டி | 29.04.2024 (திங்கட்கிழமை) | மு.ப 11.00 | பி.செ கரவெட்டி |
| 3 | பிரதேச செயலகம் தெல்லிப்பளை | 30.04.2024(செவ்வாய்க்கிழமை) | மு.ப 09.30 | பி.செ தெல்லிப்பளை |
| 4 | பிரதேச செயலகம் உடுவில் | 30.04.2024 (செவ்வாய்க்கிழமை) | மு.ப 11.00 | பி.செ உடுவில் |
| 5 | பிரதேச செயலகம் நெடுந்தீவு | 30.04.2024 (செவ்வாய்க்கிழமை) | பி.ப 02.00 | பி.செ நெடுந்தீவு |
| 6 | பிரதேச செயலகம் காரைநகர் | 02.05.2024 (வியாழக்கிழமை) | மு.ப 09.30 | பி.செ காரைநகர் |
| 7 | பிரதேச செயலகம் சங்கானை | 02.05.2024 (வியாழக்கிழமை) | மு.ப 10.30 | பி.செ சங்கானை |
| 8 | பிரதேச செயலகம் சண்டிலிப்பாய் | 02.05.2024 (வியாழக்கிழமை) | மு.ப 11.30 | பி.செ சண்டிலிப்பாய் |
| 9 | தகவல் தொழில்நுட்ப பூங்கா | 03.05.2024 (வெள்ளிக்கிழமை) | மு.ப 09.30 | தகவல் தொழில்நுட்ப பூங்கா, யாழ்ப்பாணம் ப.நோ.கூ சங்க கட்டடம் |
| 10 | பிரதேச செயலகம் வேலணை | 03.05.2024 (வெள்ளிக்கிழமை) | மு.ப 11.00 | பி.செ வேலணை |
| 11 | பிரதேச செயலகம் ஊர்காவற்றுறை | 03.05.2024 (வெள்ளிக்கிழமை) | பி.ப 02.00 | பி.செ ஊர்காவற்றுறை |
| 12 | பிரதேச செயலகம் மருதங்கேணி | 06.05.2024 (திங்கட்கிழமை) | மு.ப 09.30 | பி.செ மருதங்கேணி |
| 13 | பிரதேச செயலகம் சாவகச்சேரி | 06.05.2024 (திங்கட்கிழமை) | மு.ப 11.30 | பி.செ சாவகச்சேரி |
| 14 | பிரதேச செயலகம் யாழ்ப்பாணம் | 07.05.2024 (செவ்வாய்க்கிழமை) | மு.ப 09.30 | பி.செ யாழ்ப்பாணம் |
| 15 | பிரதேச செயலகம் நல்லூர் | 07.05.2024 (செவ்வாய்க்கிழமை) | மு.ப 11.30 | பி.செ நல்லூர் |
| 16 | மாவட்டச்செயலகம்- யாழ்ப்பாணம் | 08.05.2024 ((புதன் கிழமை) | மு.ப 09.30 | நாவற்குழி அரச களஞ்சியசாலை |

**ம.பிரதீபன்**
**அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர் (பதில்)**
**யாழ் மாவட்டம்.**

(ஏ) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மன்னாரில் நேற்றுக் கவனவீர்ப்பு



மன்னார், ஏப். 25

**உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக கடமையாற்றுபவர்கள் மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக நேற்று மதியம் அமைதி வழிப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.**

சம்பள உயர்வு, மேலதிக நேரக் கொடுப்பனவு, பதில் கடமை, காகிதாதிச் செலவுகள் உள்ளடங்கலாக பல்வேறு கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்வதில் பல வருடங்களாக நீடித்து வரும் இழுபறி நிலையை உடனடியாக நிவர்த்தி செய்து தருமாறு கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவை சுற்றறிக்கைக்கு அமைவாக 7 ஆயிரத்து 500 ரூபாவாக அதிகரித்து வழங்கு, பதில் கடமைக்கான கொடுப்பனவை வழங்கு, இல்லாவிட்டால் பதில் கடமையை நிறுத்து, வெளிக்களக் கொடுப்பனவை 300 ரூபாவில் இருந்து 3 ஆயிரம் ரூபாவாக அதிகரி, காகிதாதிக் கொடுப்பனவை வழங்கு, அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு சம்பந்தமற்ற வேலைகளைத் திணிக்காதே போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஒ-56)



# 'ஒரேஞ்' நிறத்துக்கு மாறியது ஏதென்ஸ்

கிரீக், ஏப். 25

வடஅமெரிக்காவின் சகாரா புழுதிமேகங்கள் காரணமாக கிரேக்கத்தின் ஏதென்ஸ் உட்பட பல நகரங்கள் ஒரேஞ் நிறத்துக்கு மாறியுள்ள ஒளிப்படங்கள் கிரேக்கத்தின் ஊடகங்களால் வெளியிடப்பட்டுள்ளன.

மத்தியதரைக் கடலில் காணப்பட்ட தூசு மேகங்களும் கிரேக்கத்தின் வரலாற்று புகழ்மிக்க பல நகரங்களை சூழ்ந்து கொண்டதால் தெற்கு கிரேக்கத்தின் மீதான வானம் திடீரென ஒரேஞ் நிறத்துக்கு மாறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடும் காற்று காரணமாக கிரேக்கத்தின் தென்பகுதிகளில் காட்டுத்தீ மூண்டுள்ளது. கடந்த 24 மணிநேரத்தில் 25 இடங்களில் காட்டுத்தீ ஏற்பட்டுள்ளது. அவற்றில் சில ஆபத்தான நிலையை அடைந்துள்ளதாகவும் கிரேக்கத்தின் ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (ம)

**விற்பனைக்கு**

Double Door குளிர்சாதனப்பெட்டி (Singer), Double Bed

முதிரைக்கட்டில் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 077 617 6354


## கண்ணீர் அஞ்சலி

வண்ணை. ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய தர்மகர்த்தா சபையின் முன்னாள் உறுப்பினரும், முன்னாள் மாநகரசபை உறுப்பினருமாகிய

**இராசதுரை கணேசராசா**

அவர்களின் மறைவு எம்மை எல்லாம் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா இறைவனின் பாதத்தில் அமைதியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!



தோற்றம் 23.11.1954 — மறைவு 22.04.2024

தர்மகர்த்தா சபை
வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தானம்
(நாச்சிமார் கோவில்)

## REGIONAL DIRECTORATE OF HEALTH SERVICES, JAFFNA

## INVITATION FOR BIDS

### Procurement of Electrical & Electronic Goods

A. The Regional Procurement Committee invites sealed bids from eligible and qualified bidders for the Supplies, Works as specified following Tables.
01) Electrical & Electronic Goods
Bidding will be conducted through National Competitive Bidding Procedure

B. To be eligible for contract award the successful bidder shall not have been blacklist and shall need the following requirements
01) Bidders shall have valid business registration
02) Bidders shall have Manufacturer Authorization for their goods.

C. Interested eligible bidders may obtain further information from the Regional Director of Health Services, Jaffna Contact No (021 2222278/4557 ext 20), during the office hours and inspect the Bidding Documents at the same address any working days for 9.00am to 3.00pm except 12.30 to 13.30 hours

D. A complete set of English Bid documents may be purchased by interested bidders on the submission of "Application for Bid Documents" available in this office and upon payment of a non-refundable fee as specified in the table by cash on working days from 25.04.2024 to 10.05.2024 during 09.00 Hours to 15.00 Hours.

E. Bids must be delivered on or before 10.00 AM of 13.05.2024 to the address given below in the tender box available at the Room of Transport & Procurement Management (TPM). Bids will be opened immediately after the closing of the bids in the presence of the bidders or their representatives.

F. Bid shall be valid for a remind 90 days from the last date fixed for receiving of Bids or any extended period and Bid Security valid for 118days from the bid opening

G. Pre bid meeting Will be on 07.05.2024 at 10.00 am At RDHS Office Jaffna

H. Procurement committee will be the right to make final decision in regard the accept or reject Bids

Table -1

| Reference No | Item | Qty | Non refundable fees | Bid Security | Bid Security Validity period |
|---|---|---|---|---|---|
| NP/RDHS/PSSP/2024/EE/01 | Installation & Supply of Air conditioner 12000BTU | 01 | 2,000.00 | 50,750.00 | Till 08.09.2024 |
| | Installation & Supply of Air conditioner 18000BTU | 04 | | | |
| | Installation & Supply of Air conditioner 24000BTU | 11 | | | |
| NP/RDHS/PSSP/2024/OE/01 | Photo copier (Heavy Duty)<br>Photocopier<br>Multimedia Projector<br>Laminating Machine | 01<br>09<br>01<br>01 | 2,000.00 | 25,650.00 | Till 08.09.2024 |
| NP/RDHS/PSSP/2024/OE/02 | Desktop Computer<br>Laptop<br>Colour Printer (Ink tank)<br>Printer | 14<br>08<br>01<br>07 | 2,000.00 | 64,500.00 | Till 08.09.2024 |
| NP/RDHS/PSSP/2024/OE/03 | Washing Machine<br>Telivision | 01<br>01 | 2,000.00 | 2,000.00 | Till 08.09.2024 |

**Chairman, Regional Procurement committee
RDHS Office
Jaffna.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறும்படம், பாடல், நூல் வெளியீடு

மன்னார், ஏப். 25


பேசாலை அபிவிருத்திக்குழு முன்னெடுத்துள்ள நூல், குறும்படம் மற்றும் பா[illegible] வெளியீட்டு விழா, பேசாலை சென்.மேரிஸ் [illegible] மண்டபத்தில் நாளைமறுநாள் சனிக்[illegible] [illegible]பகல் 10.15 மணிக்கு நடைபெறவுள்ளது.

தலைவர் செபஸ்தியாம்பிள்ளை இராஜேஸ்வரன் பச்சேக் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம அதிதியாக மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, சிறப்பு விருந்தினர்களாக மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி பி.கிறிஸ்துநாயகம் அடிகளார், மடுத்திருத்தல பரிபாலகர் அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார், முன்னாள் குருமுதல்வர் அருட்பணி ஏ.சேவியர் குரூஸ் அடிகளார், முன்னாள் அதிபர் டிலாசால் சபை அருட்சகோதரர் ஸ்ரனிஸ்லாஸ் எனப் பலர் கலந்துகொள்ள வுள்ளனர்.

(ப-60)

## மரண அறிவித்தல்

### செல்வி சுபானி திருநாவுக்கரசு



மலர்வு 09.11.1981 உதிர்வு 23.04.2024

உரும்பிராய் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சுபானி 23.04.2024 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு - சர்வலோசனி தம்பதியர்களின் இளைய மகளும், லலிதாரானி (ஜேர்மனி), காலஞ்சென்ற சாந்தி, மற்றும் மாலினி (உரும்பிராய்), திரவியநாதன் (ஜேர்மனி), மனோகரி (கனடா), சிறிகாந்தன் (கனடா), ரவிச்சந்திரன் (ஜேர்மனி), சசிகுமார் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 26.04.2024 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் உரும்பிராய் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் இந்து இளங்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொலைபேசி இல: 076 726 4293

தகவல்:
சகோதரர்கள்
மாலினி கிரிதரன்

(CS 327)V-1


## வேலைவாய்ப்பு

**அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம் (வ.து)** எமது சங்கத்தின் கிளை நிலையங்கள், உற்பத்தி தொழிற்சாலை ஆகியவற்றில் பயிலுனர்களாக வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. பயிற்சிக்கு பின் வேலைக்கு சேர்த்துக்கொள்ளப்படுவர். சங்க தொழிற் பரப்பிற்குள் வசிப்பவர்கள் மட்டும் தமது விண்ணப்பங்களை **பொது முகாமையாளர் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம் அச்சுவேலி** எனும் முகவரிக்கு 30.04.2024 ற்கு முன்னர் அனுப்பி வைக்கலாம்.

**குறிப்பு: பயிற்சி காலத்திலும் வேதனம் வழங்கப்படும்**

பொது முகாமையாளர்
அச்சுவேலி ப.தெ.வ.அ.கூட்டுறவு சங்கம்.
24.04.2024

## மரண அறிவித்தல்



தோற்றம் 14 . 11 . 1940 மறைவு 23 . 04 . 2024

### கந்தையா விஜயரத்தினம்

(ஓய்வுபெற்ற கட்டட தொழில் நுட்ப பரிசோதகர் கல்வித்திணைக்களம்)

யாழ்ப்பாணம் அரியாலையைப் பிறப்பிடமாகவும் கண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கோ. கந்தையா விஜயரத்தினம் (ஓய்வுபெற்ற கட்டட தொழில் நுட்ப பரிசோதகர் கல்வித்திணைக்களம்) நேற்று முன்தினம் (23.04.2024) செவ்வாய்க்கிழமை அதிகாலை கண்டியில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோ. கந்தையா (பிரதம தபால் அதிபர்) - இரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், சோமசுந்தரம் - ரஞ்சிதம்சிந்தாமணி தம்பதியரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான புஸ்பராணி, கமலாதேவி, தவமணி மற்றும் கனகலிங்கம் (பொறியியலாளர்-(இலங்கை மகாவலி அபிவிருத்திச்சபை, பிரதிப்பணிப்பாளர் நீர்ப்பாசனத் திணைக்களம் - கனடா), வைத்திய கலாநிதி தியாகராசா (ஐக்கிய அமெரிக்கா) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சீவரத்தினம் (ஓய்வு நிலை தலைமை நெறியாளர் புகையிரத திணைக்களம்), தருமலிங்கம் (ஓய்வுநிலை கணக்காய்வாளர் புகையிரத திணைக்களம்), தனபாலசிங்கம் (ஓய்வுநிலை ஆசிரியர் - விஞ்ஞானப் பட்டதாரி - லண்டன்), தருமலெட்சுமி மற்றும் காந்தி (ஐக்கிய அமெரிக்கா), காலஞ்சென்றவர்களான ஞானசுந்தரம், சிவலோகநாதன், பஞ்சாட்சரம், சபாரத்தினம், சவுந்தரநாயகி, கமலாம்பிகை மற்றும் சங்குதேவி (ஓய்வுபெற்ற - ஆசிரியை), பத்மினிதேவி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2024) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு 485 / 18, பேராதனை வீதி, கண்டியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மஹியாவ பொது மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும்.

தொடர்பு: **மனைவி - பரமேஸ்வரி**
**081 220 3668, 077 546 5071**
**சீவரத்தினம் ஜீவேந்திரா (மருமகன்-U.K)**
**077 379 71405**

தகவல்:
குடும்பத்தினர்

cs.44723) (2.6)

## மரண அறிவித்தல்



தோற்றம் 10 . 08 . 1940 மறைவு 23 . 04 . 2024

### அமரர் நாகலிங்கம் அன்னம்மா

பொற்பதி வீதி கொக்குவில் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகலிங்கம் அன்னம்மா நேற்று முன்தினம் (23.04.2024) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் இணுவிலைச் சேர்ந்த சின்னட்டி-சின்னமோனை தம்பதியரின் அன்பு மருமகளும் அமரர் சின்னட்டி நாகலிங்கம் (புகையிரத பிரதம பாதுகாவலர்) அவர்களின் அன்பு மனைவியும் தேன்மொழியின் அன்புத் தாயாரும் லோகநாதனின் (ஓய்வு பெற்ற பொறியியலாளர் காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபனம்) அன்பு மாமியாரும் தர்சிகனின் (லண்டன்) அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், சரஸ்வதி (பவானி), மனோன்மணி மற்றும் மகேஸ்வரி, யோகேஸ்வரி, ராயேஸ்வரி, லலிதா, பத்மநாதன் ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.04.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.


பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
076 343 1857

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 05 . 1959



மறைவு 18 . 04 . 2024

## தில்லையம்பலம் புவனேசசிங்கம்
### (இராசகிளி)

நயினாதீவு 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி (கைல்புறோன்) பாட்பிறிட்டிஷால் நகரை வதிவிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் புவனேசசிங்கம் (இராசகிளி) அவர்கள் கடந்த (18.04.2024) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - புவனேஸ்வரி தம்பதியரின் அருமைப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், வசந்தாவின் ஆருயிர்க் கணவனும், நாகதீபன், லக்ஸ்மன், கீர்த்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மதுசிகா, துளசிகா ஆகியோரின் அன்பு மாமனாரும், நிவிசாவின் பேரன்புமிக்க பேரனும், மோகன், தில்லா ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வராசா, தெய்வேந்திரம், சாந்தலிங்கம் (மணி) ஆகியோரின் அருமை மச்சானும், ஈசு, ஜெயபாலன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2024) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிமுதல் பிற்பகல் 02.00 மணிவரை **Bergfriedhof, Neuenstadterstr, 74177 BadFriedrichshall, Germany** இல் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**29/1, கச்சேரி லேன்,**
**யாழ்ப்பாணம்.**
**T.P: 077 912 9014**

தகவல்:
குடும்பத்தினர்
செல்வராசா (மச்சான்)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 24 . 11 . 1998



விண்ணில் 25 . 04 . 2023

செல்வன்
## கோபாலகிருஷ்ணன் கஜீபன்
### (பொலிஸ் உத்தியோகத்தர் - கிளிநொச்சி)
### திதி : சஷ்டி (13.05.2024)

காற்றும் கலங்குதையா - இனி
காணாதோ உன் முகத்தையென்று
பேராசை இல்லாதே பாசம் அதிகம் வைத்தாய்
ஒளிவுமறைவு இல்லாத உன் ஒப்பற்ற பேச்சினை
எப்போது கேட்போம் ஐயா! - உன்னோடு
கூடி வாழ்ந்த தினால் கொண்டிருந்த குதூகலம்
உன்னிழப்பால் ஓடி ஒழிந்ததையா!
உன்னோடு தொலைந்ததையா!
வீட்டிற்கு வருவதற்கு புன்னகையோடு காத்திருந்தாய்
இடையிலே விண்ணவனும் வருந்தியழைத்தானோ!
உன் பிரிதுயர் தாளாது வாடி வருந்துகிறோம்.


பெரியமாவடி வீதி,
சாவகச்சேரி.

பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினர்
077 397 9435

(CS/54819) J-1

# மரண அறிவித்தல்

மலர்வு 07 . 08 . 1946



உதிர்வு 22 . 04 . 2024

## ஏரம்பு கந்தசாமி
### (ஐஸ் மாமா)

யாழ் எழுமுள்ளி மானிப்பாயை பிறப்பிடமாகவும், சாவகச்சேரி மட்டக்குழி கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட ஏரம்பு கந்தசாமி அவர்கள் சாவகச்சேரியில் திங்கட்கிழமை (22.04.2024) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஏரம்பு - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தவமணியின் அன்புக் கணவரும், சிறிதரன், சந்திரபாலு, சுபேசினி, இந்துமதி ஆகியோரின் அன்புத் தந்தையும், வேல்விழி, சுகிர்தா, குகநேசன், சரத்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான நாகராசா, பூபாலசிங்கம் மற்றும் மகாலட்சுமி (மனோன்மணி), காலஞ்சென்றவர்களான விஜயலக்சுமி, ஜெயலக்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், விசாகன், சாம்பவி, அபிராமி, அஸ்வின், அஸ்லின், அஷ்வர்த்தன், அபிஷேக், ஜோனத்தன், கிருஷ்த்தன், தனன்யா, தஷ்விகா ஆகியோரின் அன்புப் பேரனும், கண்மணி காலஞ்சென்றவர்களான லோகமணி, சுப்பிரமணியம், மயில்வாகனம், பரமசிவம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், விஜயகுமாரி, வசந்தகுமாரி, ராஜகுமாரி, துஷ்யந்தகுமாரி, தேவகுமார், ரஞ்சித்குமார், காலஞ்சென்ற சந்திரகுமார், மற்றும் கோகிலகுமார், பாலகுமார், மீனகுமார், செல்வகுமார், லலித்குமார், சிந்துஜா ஆகியோரின் சின்னையாவும், ஜீவகுமாரி, பரமேந்திரன், காலஞ்சென்ற சாந்தகுமாரி, இரவீந்திரன், வதனகுமாரி, க்ஜேந்திரன், தனுஷன் தாட்சாயினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பார்வைக்காக நாளை (26.04.2024) வெள்ளிக்கிழமை 10am - 12pm வரை 169 பொன்னாலை வீதி, எழுமுள்ளி, மானிப்பாய் மேற்கு என்ற முகவரியில் வைக்கப்பட்டு, அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (28.04.2024) ஞாயிற்றுக்கிழமை 7.00 மணியளவில் 1/4 B5, Farm Road, மட்டக்குழியா கொழும்பு 15 என்னும் இடத்தில் நடைபெற்று பூதவுடல் 11.00 மணியளவில் மாதம்பிட்டி பொதுமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 929 1990**
**077 717 3201**

(CS/54816) J-1

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 03 . 1952



மறைவு 24 . 04 . 2024

## திருமதி இலட்சுமிநாதன் புஸ்பராணி (வேவி)

கோயிலாமனையை பிறப்பிடமாகவும் ஆசிரியர் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இலட்சுமிநாதன் புஸ்பராணி அவர்கள் நேற்று (24.04.2024) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதர் - செல்லம்மா தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான இராஜகாரியர் - சின்னத்தங்கம் தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற இலட்சுமிநாதன் அவர்களின் அன்பு மனைவியும், கனகம்மாவின் (வவா) அன்புச் சகோதரியும், தேவராஜ் (கொழும்பு), மாருதி (மேலதிக மாவட்ட பதிவாளர் - காணிப்பதிவகம் - யாழ்ப்பாணம்), உமைப்பிரியை (Civil Engineer - சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திலிப்குமார் (உதவிப் பணிப்பாளர் - கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபை - மன்னார்), தாங்கீர்த்தனன் (Construction supervisor - அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஆதேக்ஷன், சுகர்ஷா (முன்பள்ளி - BBC), அகன்யா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், இராஜலட்சுமி, இராசநாதன், சிவநாதன், சிவபாக்கியம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.04.2024) வெள்ளிக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப 2.00 மணியளவில் பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 071 9104

(CS 330) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குஜராத்தை வீழ்த்தியது டெல்லி

ஐ.பி.எல். தொடரின் நேற்றைய ஆட்டத்தில் டெல்லி கப்பிட்டல்ஸ் அணி 4 ஓட்டங்களால் குஜராத் டைட்டன்ஸ் அணியை வீழ்த்தியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற குஜராத் அணி முதலில் களத் தடுப்பைத் தெரிவு செய்தது. நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் டெல்லி அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 224 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. டெல்லி அணி சார்பாக ரிஷப் பண்ட் 88 ஓட்டங்களையும், அக் ஷர் பட்டேல் 66 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் குஜராத் டைட்டன்ஸ் அணி சார்பாக சத்தீப் வாரியர் 15 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

225 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கிக் களமிறங்கிய குஜராத் அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 220 ஓட்டங்களைப் பெற்று 4 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

குஜராத் அணி சார்பாக சஹா 39 ஓட்டங்களையும், சாய் சுதர்சன் 65 ஓட்டங்களையும், டேவிட் மில்லர் 55 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். டெல்லி அணி சார்பாக பந்துவீச்சில் ரஷிக் சலாம் 3 விக்கெட்டுக்களையும், குல்தீப் யாதவ் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். (எ)

## மரண அறிவித்தல்

பிறப்பு
29
09
1946



இறப்பு
24
04
2024

### திருமதி பிரான்சிஸ் ஸ்ரெலா

**(இளைப்பாறிய தாதி, யாழ். போதனா வைத்தியசாலை)**

நாரந்தனை வடக்கை பிறப்பிடமாகவும், 70/5, ஈச்சமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிரான்சிஸ் ஸ்ரெலா அவர்கள் நேற்று (24.04.2024) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராயப்பு பிரான்சிஸ்சின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சவிரிமுத்து - லூத்தம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற இராயப்பு - அன்னம்மா தம்பதியரின் அருமை மருமகளும், ஜெயந்தி, சர்மிலா ஆகியோரின் அன்புத் தாயாரும், மதியாளன் (St.Antony's Computer, Jaffna) அவர்களின் மாமியாரும், ஜெயாளன், ஜெய்சன், ஜெய்சிகா, சஜா, நிஜா ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்ற மரியதாசன், யேசுதாசன் மற்றும் சிசிலியா, ஜெயபாலன், கோமதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பவுலின்மேரி, பொலின் வயலற், மரியநாயகம், றஞ்சினி, றோகினி, றாஜினி, பிறேமினி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.


அன்னாரின் நல்லடக்கம் இன்று (25.04.2024) வியாழக்கிழமை கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் பி.ப 3.00 மணிக்கு திருப்பலியின் பின்பு நல்லடக்கத்திற்காக நாரந்தனை புனித பேதுருவானவர் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**70/5, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்.**
**076 6967 434**

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



தோற்றம்
**16.06.1934**

மறைவு:
**22.04.2024**

### மரியாம்பிள்ளை பிரான்சிஸ் இராசேந்திரம்

**(ஓய்வு பெற்ற கணக்காய்வு அதிகாரி, கடதாசிக் கூட்டுத்தாபனம், ஆயர் இல்லம் கியூடெக்)**

புலோலியைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட மரியாம்பிள்ளை பிரான்சிஸ் இராசேந்திரம் 22.04.2024 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளப்பு மரியாம்பிள்ளை-சிசிலியா தம்பதியின் அருமை மகனும் ஞானப்பிரகாசம் பந்திநாதர்-மரியம்மா தம்பதியின் அன்பு மருமகனும் பெனிக்னா ஞானரட்ணம் (ஓய்வு பெற்ற ஆசிரியை யா/அளவெட்டி அருணோதயக் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும் பெனராஜ், சாந்தி (லண்டன்), ஆனந்தி (பரிஸ்), ஜெயந்தி (லண்டன்), சுகந்தராஜ் (கமநல அபிவிருத்தித் திணைக்களம் யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பொளின் (தொழிற்துறைத் திணைக்களம் வ.மா) காலஞ்சென்ற ராஜன், ஜோர்ஜ், டிலிப் ஜெயந்தினி (யா/புனித சாள்ஸ் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற றெஜினா மற்றும் அருட்சகோதரி ஜசிந்தா (திருச்சிலுவை கன்னியர் மடம் யாழ்ப்பாணம்), தேவராஜா, புவிராஜா, ஜெயராஜா, அருட்பணி, அல்பேட் யோகராஜா (அவுஸ்ரேலியா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் தேவரட்ணம், யோகரட்ணம், பாலரட்ணம், ஜீவரட்ணம் காலஞ்சென்ற அருட்சகோதரி புளோறினா (தி.சி), மற்றும் நவரட்ணம், குணரட்ணம், தவரட்ணம், தனரட்ணம், அருட்பணி யோசப்தாஸ் ஜெபரட்ணம் (குரு முதல்வர் யாழ் மறை மாவட்டம்) விமலரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ராகுல், ராகவி, ஸ்ரெபானி, சாளினி, ரானியா, ஜோண், டிலான், டேமியன், டினோஜ், அங்கஸ், ஜெரெமி, அர்ஜனன், அதிநயன் ஆகியோரின் பாசமிகு பேரனும், எய்டன், ஐவன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் எதிர்வரும் 27.04.2024 (சனிக்கிழமை), காலை 9.00 மணிக்கு அளவெட்டி புனித சூசையப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியின் பின்னர் அளவெட்டி சேமக்காலையில் இடம் பெறும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அலுக்கை,**
**அளவெட்டி கிழக்கு**
**அளவெட்டி.**

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈரான்....

உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்தை நேற்று மக்கள் பாவனைக்குக் கையளித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நமது இரு நாடுகளுக்கும் ஆசிய பிராந்திய நாடுகளுக்கும் இடையே அதிகபட்ச ஒத்துழைப்பு, ஒருங்கிணைப்பு, நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமை என்பவற்றை உறுதி செய்வதே இங்கு மிக முக்கியமான விடயம் என்று நான் நம்புகிறேன். ஈரான் இஸ்லாமியக் குடியரசிடம் உள்ள நவீன தொழில்நுட்ப அறிவை இலங்கையுடன் பகிர்ந்து கொள்ளத் தயாராக உள்ளோம். இலங்கையுடன் சிறந்த பங்காளித்துவத்துடன் முன்னோக்கிச் செல்ல ஈரான் தயாராக இருப்பதாக நான் உறுதியளிக்கிறேன் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இரு நாடுகளுக்கும் சவால்களை எதிர்கொள்வதில் நல்ல அனுபவம் உள்ளது. இந்தச் சவால்களையும் நாங்கள் வெற்றிகரமாக எதிர்கொண்டோம். ஈரானுடனான தொடர்புகளைப் பலப்படுத்தி முன்னோக்கிக் கொண்டு செல்வதே நோக்கமாகும் என்று தெரிவித்தார். (அ-எ-26)

## ஈரானுடன்...

ணத்தை முடித்துக் கொண்டு இலங்கை வந்துள்ள நிலையில், அமெரிக்காவின் இந்த எச்சரிக்கை வெளியாகியுள்ளது.

ஜனாதிபதி ரைசியின் பாகிஸ்தான் பயணத்தின்போது ஈரானுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே 8 உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அவரது இலங்கைப் பயணத்தின்போது 5 உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படும் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன. இந்தநிலையில் அமெரிக்கா நேற்று இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

இஸ்ரேல், ஈரான் இடையே போர்ப் பதற்றம் அதிகரித்துள்ள நிலையில் அமெரிக்கா இஸ்ரேலுக்கு ஆதரவாகச் செயற்படுகின்றது. ஈரான் ஜனாதிபதியின் பாகிஸ்தான் மற்றும் இலங்கைப் பயணங்கள் தொடர்பில் ஏற்கனவே அதிருப்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-எ-இ)

## இலங்கை...

இஸ்ரேல் மற்றும் ஈரானுக்கு இடையே போர்ப்பதற்றம் ஏற்பட்டிருக்கும் நிலையில் இலங்கைக்கான பயணத்தை ஈரான் ஜனாதிபதி மேற்கொண்டுள்ளார். இவர் மத்தள விமானம் நிலையம் ஊடாக நேற்று இலங்கையை வந்தடைந்தார். ஈரான் ஜனாதிபதிக்கு இலங்கையில் சிறப்புப் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

2008 ஆம் ஆண்டு அப்போதைய ஈரான் ஜனாதிபதி மொஹமட் அஹமதி நிஜாட்டின் வருகைக்குப் பின்னர், தற்போது ஈரான் ஜனாதிபதி ஒருவர் இலங்கைக்கு வந்துள்ளார். (எ-இ)

## நல்லூர்...

2017ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22ஆம் திகதி மாலை அந்தச்சமயம் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதியாக இருந்த மா.இளஞ்செழியன் நல்லூர் பின்புற வீதியில் காரில் பயணித்தபோது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் அவரது மெய்ப்பாதுகாவலர் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பிலான சுருக்க முறையற்ற வழக்கு விசாரணைகள் யாழ்.நீதிவான் நீதிமன்றில் நடைபெற்று சட்டமா அதிபர் திணைக்களத்துக்குப் வழக்கு பாரப்படுத்தப்பட்டது. சட்டமா அதிபர் திணைக்களத்தால் யாழ்.மேல் நீதிமன்றில் குற்றப்பகிர்வு பத்திரம் தாக்கல் செய்யப்பட்டதை அடுத்து, யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி டெனிஸ் சாந்தன் சூசைதாஸன் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் நேற்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் சாட்சியமளித்தார். அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந்தும், எதிர்த்தரப்புவாதியாக சர்மினி பிரதீபனும் செயற்பட்டனர்.

நீதிபதி இளஞ்செழியன் வழங்கிய வாக்குமூலத்தில்,

“சம்பவதினம் எனது சொந்தத் தேவைக்காக நீதிமன்ற நிலுவை வழக்குகளின் பிரகாரம் வந்தேன். முற்பகல் 9 மணிக்கு நல்லூர் சங்கிலியன் வீதியில் உள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து புறப்பட்டு மேல்நீதிமன்றத்தில் உள்ள எனது அறைக்கு வந்தேன்.

மீண்டும் திரும்பிச் சென்றபோது சஞ்சீவன் என்பவர் சாரதியாகச் செயற்பட, பொலிஸ் கொன்ஸ்டபிள் விமலசிறி காரின் முன்புறம் இடதுபுற ஆசனத்தில் அமர்ந்திருந்தார். காரின் பின்புற ஆசனத்தில் நான் அமர்ந்திருந்தேன் சஞ்சீவனின் மோட்டார் சைக்கிளில் பொலிஸ் சார்ஜண்ட் சரத் ஹேமசந்திர காரின் பின்னால் பயணித்தார்.

கார் கண்டி வீதியூடாக கோயில் வீதியை அடைந்து, கோயில் வீதி ஊடாக வலப் பக்கமாக பருத்தித்துறை வீதிக்குச் செல்ல முற்பட்டபோது, பின்புறம் மோட்டார் சைக்கிளில் வந்த சார்ஜண்டை அவதானித்தேன். அன்று ஆலய உற்சவ காலம் என்பதால் சார்ஜண்ட் முன்னே வந்து வீதிச் சமிக்ஞைமூலம் எனது காரை பருத்தித்துறை வீதிக்கு அனுப்பினார்.

காரின் பின்புறக் கண்ணாடியால் அவதானித்தபோது சிவில் உடை தரித்த ஒருவர் சார்ஜண்டை நோக்கி நகர்ந்து அவரது துப்பாக்கி இடுப்புப்பட்டி பொத்தானைக் கழற்றிப் பறிக்க முயன்றார். நான் அதை அவதானித்துச் சத்தமிட்டுக் காரை நிறுத்தச் சொன்னேன். கார் பருத்தித்துறை வீதியின் வலதுபுறமாக எதிர்மாறு திசையில் நிறுத்தப்பட்டது.

சார்ஜண்ட் துப்பாக்கியைப் பறித்தவரோடு மல்லுக்கட்டி அவரது கழுத்தைப் பிடித்தார். அந்தச் சந்தர்ப்பத்தில் துப்பாக்கி சிவில் உடை தரித்தவரின் கைக்குச் சென்றுவிட்டது. அவர் வலக்கையில் துப்பாக்கியை உயர்த்தி வைத்திருந்து ‘லோட்’ செய்தார்.

12 முதல் 15 அடி இடைவெளியில் இருந்த நான், துப்பாக்கியைக் கீழே போடுமாறு கூறியவாறு 8 அடிவரை நெருங்கிச் சென்றபோது, சார்ஜண்ட் “மகே அம்மே” என்று அலறியவாறு வயிற்றைப் பிடித்தவாறு சாய்ந்தார். நான் உடனே பின்னே வந்தேன். என்னை நோக்கித் துப்பாக்கிச் சூடு நடத்த முயன்றபோது பொலிஸ் கொன்ஸ்டபிள் விமலசிறி என்னை காரின் இடப்புறமாகத் தள்ளிவிட்டுத் தானும் படுத்துக்கொண்டார். துப்பாக்கிச்சூட்டை அடுத்து பொலிஸ் கொன்ஸ்டபிளும் பதிலுக்கு துப்பாக்கிச் சூடு நடத்தினார். அவரது இடது கை தோள்மூட்டுக்குக் கீழ் காயம் ஏற்பட்டிருந்தது. இருவரதும் துப்பாக்கி ரவைகள் தீர்ந்த நிலையில், சிவில் உடை தரித்தவர் லிங்கம் கூல்பார் இருக்கும் வழியாக எனது கார் நிறுத்தப்பட்ட திசைக்கு எதிராகத் தப்பித்து ஓடினார்.

சுமார் 12 நிமிடங்கள் எதிராளியைக் கண்டவன் என்றவகையில் எதிரிக் கூண்டில் நிற்கும் எதிராளிதான் இதற்கு முழுக்காரணம் என்று நான் கூறுவேன். அங்கிருந்த கடைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்த நிலையில், உதவிக்கு எவரும் இல்லை. காயப்பட்ட கொன்ஸ்டபிள், வாகனச் சாரதியுடன் நானும் இணைந்து சார்ஜண்டை வாகனத்தில் ஏற்றினோம். காயம்பட்டவர்களை மருத்துவமனை நோயாளர் விடுதிக்கு மாற்றும்வரையில் இருந்துவிட்டு இரவு 11 மணியளவில் வீட்டுக்குச் சென்றேன். 12.20 மணிக்கு சார்ஜண்ட் இறந்த தகவல் எனக்குக் கிடைத்தது. என் வாழ்நாளில் அதை மறக்க முடியாது ”என்று குறிப்பிட்டார்.

எதிராளி சார்பில் முன்னிலையான சட்டத்தரணி சர்மினி பிரதீபன், “நீங்கள் சொந்தத் தேவைக்காகவே வந்திருந்தீர்கள். உங்களது மெய்ப்பாதுகாவலர் உங்கள் வாகனச் சாரதி சஞ்சீவனின் வாகனத்தில் பயணிக்க அனுமதி இருந்ததா?” என்று கேள்வி எழுப்பினார்.

“பிரதான சந்தேகநபரின் அண்ணனின் வீடு சம்பவ இடத்துக்கு அருகில் உள்ளது. அவரும், குடும்பத்தினரும் அங்கே இருந்தனர். முச்சக்கர வண்டிச் சாரதிகளுக்கு இடையே பிரச்சினை ஏற்பட்டது. அதைக் கேட்க வந்த பொலிஸ் சார்ஜண்டே துன்பகரமாக உயிரிழந்தார். உங்களைக் கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் இந்தச் சம்பவம் இடம்பெறவில்லை” என்றும் சட்டத்தரணி குறிப்பிட்டார்.

அதை நிராகரித்த மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன், “நல்லூர்ச் சந்திஎன்பதுசுட்டுவிளையாடுவதற்கான இடம் அல்ல” என்று குறிப்பிட்டார். சாட்சியப் பதிவு நிறைவுற்ற பின்னர் பலத்த பாதுகாப்புடன் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் மேல் நீதிமன்றில் இருந்து வெளியேறினார். (எ-26,125)

## நண்பனை...

என்று தெரிவித்து மேல் நீதிமன்றில் கண்ணீர் விட்டு அழுதார் பொலிஸ் கொன்ஸ்டபிள் விமலசிறி.

2017ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22ஆம் திகதி மாலை அந்தச் சமயம் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதியாக இருந்த மா.இளஞ்செழியன் நல்லூர் பின்புற வீதியில் காரில் பயணித்தபோது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் அவரது மெய்பாதுகாவலரான பொலிஸ் சார்ஜண்ட் சரத் ஹேமசந்திர உயிரிழந்தார். பொலிஸ் கொன்ஸ்டபிள் விமலசிறி காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பிலான சுருக்க முறையற்ற வழக்கு விசாரணைகள் யாழ்.நீதிவான் நீதிமன்றில் நடைபெற்று சட்டமா அதிபர் திணைக்களத்துக்குப் வழக்கு பாரப்படுத்தப்பட்டது. சட்டமா அதிபர் திணைக்களத்தால் யாழ்.மேல் நீதிமன்றில் குற்றப்பகிர்வு பத்திரம் தாக்கல் செய்யப்பட்டதை அடுத்து, யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி டெனிஸ் சாந்தன் சூசைதாஸன் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நேற்று மேல் நீதிமன்றில் கொன்ஸ்டபிள் விமலசிறி தனது சாட்சியத்தைப் பதிவு செய்தார்.

“காரின் பின்புறம் அமர்ந்திருந்த மேல் நீதிபதி சத்தமிட்டதும், உடனடியாகக் காரை நிறுத்தி இறங்கினோம். இரு துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன. நான் துப்பாக்கிதாரியை நோக்கி துப்பாக்கியைக் கீழே போடுமாறு சத்தமிட்டேன். இருந்தும் துப்பாக்கிதாரி நீதிபதியை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தினார். நீதிபதியைக் காப்பாற்றுவதற்காக நீதிபதியைப் பின்னோக்கித் தள்ளினேன். அப்போது எனது இடது தோள்பட்டையில் துப்பாக்கி ரவை பாய்ந்தது. அதன் பின்னர் துப்பாக்கிதாரியை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டேன். எதிரியும் துப்பாக்கிச் சூடு நடத்தினார்.

சம்பவத்தில் காயமடைந்த மெய்ப்பாதுகாவலரான எனது நண்பனை எப்படியாவது மருத்துவமனை கொண்டு சென்று காப்பாற்ற வேண்டும் என்பதே அப்போது எனது மனதில் இருந்தது. அதனால் அவரது மோட்டார்சைக்கிள் என்ன நிலையில் அப்போது இருந்தது என்பதை நான் அவதானிக்கும் மனநிலையில் இருக்கவில்லை ” என்று தெரிவித்த விமலசிறி நீதிமன்றில் சிறிது நேரம் கண்ணீர் விட்டு அழுதார்.

சாட்சியப் பதிவின் பின்னர் வழக்கு இன்று காலை 9 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது. (அ-எ-26)

## சாட்சிக்...

முயற்சி தொடர்பான வழக்கின் சாட்சியப்பதிவு நேற்று இடம்பெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நேற்றுக் காலை 9:30 மணிமுதல் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி இளஞ்செழியனிடம் சாட்சியப் பதிவு ஆரம்பமானது. சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பில் முன்னிலையாகியிருந்த அரச சட்டவாதி நிஷாந், நீதிபதி இளஞ்செழியனை நோக்கி சாட்சி என விளித்தார். இதன்போது யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி சூசைதாசன், மருத்துவரை மருத்துவர் என்றே அழைப்பார்கள். அதே போல சாட்சி கூண்டில் நின்றாலும் அவர் நீதிபதியே. அவரை நீதிபதி என்றே விளியுங்கள் எனத் தெரிவித்தார். தொடர்ந்து நீதிபதி என விளித்து குறுக்கு விசாரணை முன்னெடுக்கப்பட்டது. (ஒ-125)

## வவுனியா...

மோசடிகள் இடம்பெறுவதாகவும் அதற்கு பொலிஸாரும் உடந்தை என செய்திகள் வெளியாகியிருந்தன.


இந்த நிலையில் வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர், வவுனியா தலைமை பொலிஸ் நிலையத்துக்கு வழங்கிய அறிவுறுத்தலுக்கமைவாக, தலைமை பொலிஸ் நிலையத்தின் குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி மூத்த பொலிஸ் பரிசோதகர் ஜெயத்திலக்க தலைமையிலான குழுவினர் வவுனியா கடவுச்சீட்டு அலுவலகத்துக்கு நேற்றுக்காலை சென்றனர்.

மோசடிகளில் ஈடுபட்டுவருபவர்கள் என அடையாளம் காணப்பட்ட 6 பேரை சந்தேகத்தில் கைது செய்துள்ளனர்.

எதிர்வரும் நாட்களில் கடவுச்சீட்டு அலுவலகம் முன்பாக ஏதேனும் மோசடிகள் இடம்பெறுமாயின் குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரியின் உத்தியோகபூர்வ தொலைபேசி இலக்கமான 0718593520 என்ற இலக்கத்துக்குத் தொடர்பு கொண்டு அறிவிக்குமாறும் பொதுமக்களுக்கு பொலிஸார் அறிவித்தல் வழங்கியுள்ளனர். (அ-ஒ-110)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சொகுசு வீடு விற்பனைக்கு



சில்லாலை பிரதான வீதியில்
தளபாடங்களுடன் சொகுசு
வீடு (3 1/2 பரப்பு) விற்பனைக்குண்டு.

(cs.54395) (N-1)

Contacts Number: **074 002 2219**
Mithiran Thirukeswaran


# பெரமுனவின் வேட்பாளர் மேதினத்தில் அறிவிப்பு?

கொழும்பு, ஏப். 25

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் யார்? என்பது தொடர்பில் மேதினக் கூட்டத்தின்போது அறிவிப்பதற்குகட்சிமட்டத்தில்திட்டமிடப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பெரமுனவின் மே தினக் கூட்டம் அந்தக் கட்சியின் தலைவர்மஹிந்தராஜபக்சதலைமையில்பொரளை கெம்பல் பார்க் மைதானத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் ஆயிரக்கணக்கானோரை பங் கேற்க வைப்பதற்குரிய ஏற்பாடுகளை பொதுஜன பெரமுன முன்னெடுத்துவருகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி என்பன ஜனாதிபதித் தேர்தல் தொடர் பிலும், வேட்பாளர் சம்பந்தமாகவும் தமது நிலைப்பா டு களை அறிவித்துள்ளன. எனினும், ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் குறித்து பெரமுன இன்னும் அறி விக்கவில்லை. இந்த நிலையிலேயே, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான தன் நிலைப்பாட்டை மேதினக் கூட்டத்தில் வைத்து பெரமுன அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-44)


## பண்ணை வேலைக்கு ஆள் தேவை

சம்பளமாக சுமார் 55.000/
வீடு கொண்டு செல்லக்கூடியதாகவும்
EPF & ETF முழுவதும்
எம்மால் கட்டப்படுவதுடன் உணவும்
எம்மால் வழங்கப்படும்.
(தங்கி நின்று வேலை செய்வதுடன் மாத
விடுமுறையில் வீடு சென்று வரலாம்.)

தொடர்புகளுக்கு:
**077 127 8122**

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் பிரதான வீதியோரமாக
**14 பரப்புக் காணி விற்பனைக்கு உள்ளது.**
மானிப்பாய் வீதி, ஆறுகால் மடம்.

தொடர்பு:- **075 944 4601**

## தவறவிடப்பட்ட நகைகள்

இலுப்பையடி வீதி மட்டுவிலில் இருந்து கோப்பாய் சிக்னல் சந்தி வரை புறப்பட்டு சென்ற நாகநாதன் ஆதவன் (AATHU) என்பவரது தங்க நகைகள் 14.04.2024 அன்று தவறவிடப்பட்டுள்ளன.
இதனை கண்டெடுத்தவர்கள் கீழ் குறிப்பிட்ட தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும். நகைகள் உரிய ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளப்படும். அத்துடன் பொருளினை கண்டெடுத்துத் தருவோருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(CS324) J-1


**076 060 7707, 077 373 9367**


## ரூ. 1,700 கிடையாது!

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு விடயத்தில் தொழிற் சங்கங்களின் சார் பில் முன்வைக்கப் பட்ட ஆயிரத்து 700 ரூபா சம்பள அதிக ரிப்பை ஏற்றுக் கொள்ளமுடியாது என்று இலங்கை பெருந்தோட்ட முத லாளிமார் சம்மேள னம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது. (ச-இ)


## மரண அறிவித்தல்

தோற்றம்
02 . 06 . 1948



மறைவு
24 . 04 . 2024

### முத்தையா ஞானரெட்ணம்

வேலணை கிழக்கு 1ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 5ம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா ஞானரெட்ணம் (இந்திரா) அவர்கள் நேற்று (24.04.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா மற்றும் பாக்கியலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், பசுபதிப்பிள்ளை - பராசக்தி தம்பதியரின் பாசமிகு மருமகனும், இராஜேஸ்வரியின் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அன்புக் கணவரும், தர்ஷன், நிறைஞ்சன், யாழினி, தாரணி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கௌஷிகா, பிருந்தா, சுகந்தன், ஜனார்த்தன் ஆகியோரின் மாமனாரும், சஜீவன், இனிஷா, டனிகா, கிரிஷினன், சக்சஜன், ஜஸ்கிதன், ஜருணன், சரண், அனிகா, ஜஷிகா, ஜருண் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான தர்மரெத்தினம், வதனேஸ்வரி மற்றும் செல்வரெத்தினம் (கனடா), வில்வரெத்தினம் (சுவிஸ்), காலஞ்சென்றவர்களான செல்வராணி, வசந்தராணி மற்றும் ஜெயரட்ணம் (வவுனியா), லலிதா (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் ஞானசௌந்தரி (ஓய்வு பெற்ற விவாகப் பதிவாளர்), புவனேஸ்வரி (லண்டன்), பஞ்சேஸ்வரி (லண்டன்), உதயமூர்த்தி (ஜேர்மனி), உதயராணி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2024) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
தர்ஷன் - 077 817 6780
நிறைஞ்சன் - 077 684 7358

வேலணை கிழக்கு,
வேலணை.

(CS/54820) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
24 . 11 . 1943



மறைவு
23 . 04 . 2024

### சிவகுரு கணேசமூர்த்தி

(புளூறபின் ஹோட்டல் முன்னைநாள் உரிமையாளர்)

மட்டுவில் மத்தி, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு கணேசமூர்த்தி நேற்றுமுன்தினம் (23.04.2024) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு - அன்னம்மா தம்பதியரின் மூத்த புதல்வரும் காலஞ்சென்ற வர்களான முத்துத்தம்பி - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், சாரதாதேவி (ராணி) அவர்களின் அன்புக்கணவரும், அருள்சாந்தன் (பிரான்ஸ்), செந்தில்மதி (பிரான்ஸ்), சஞ்ஜீவன் (கனடா), சயரூபன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்) அவர்களின் பாசமிகு தந்தையும், சுமங்கலி, பாரதிதாசன், நிஷாந்தினி, விஜயலக்ஷா ஆகியோரின் அன்பு மாமனாரும், சஸ்மித், சமீரன், அஸ்வின், அபிஷா, அஜய், சஜித், ஜெய்சன், ஜானவி, சயுசன், அபிஷ்னா ஆகியோரின் அன்புப்பேரனும் கணேசமலர், காலஞ்சென்ற சிவசண்முகம், சிவமலர், கணேசானந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச்சகோதரனும், காலஞ்சென்ற பொன்னுத்துரை, வனிதா, சிவலிங்கம், நாமகள் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 28.04.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டையடி இந்து மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

இல. 352, இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
மகன் - 77 618 9054 / 021 205 3965

(CS54818) N-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.04. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.